# மார்க்சிஸ்ட்



தத்துவ மாத இதழ்

டிசம்பர்
1999

விலை ரூ. 5.00

# மார்க்சிஸ்ட்

தத்துவ மாத இதழ்

தொகுப்பு: II  இதழ்: 6  டிசம்பர் 1999



## ஆசிரியர் குழு

பி.ஆர்.பரமேஸ்வரன் (ஆசிரியர்)

டி.லட்சுமணன் (பொறுப்பாசிரியர்)

ஜி.ராமகிருஷ்ணன்

மைதிலி சிவராமன்

அருணன், பாலு



விமர்சனங்கள், கருத்துக்கள், கடிதங்கள்
எழுதவேண்டிய முகவரி:

**ஆசிரியர், மார்க்சிஸ்ட் மாத இதழ்,**
**11, வைத்தியராம் தெரு, தி.நகர்,**
**சென்னை _ 600 017**



*வெளியிடுபவர்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)*
*தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் என்.வரதராஜன்,*
*அச்சிடுபவர் : என்.ராஜாத்தி, நீட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 002*
**Registered with the Registrar of Newspaper for India under Registration No: 1513/89**

1. "பைமாஷ்" ஓர் ஆய்வு
-டி.லட்சுமணன் 3

2. கீதையின் அடிப்படை
(அ) கீதைகாட்டும் தத்துவ அகழி
-சு.பொ.அகத்தியலிங்கம் 16

3. மார்க்சிய பார்வையில் அன்னை தெரசா
-விஜய் பிரசாத் 42

4. சீனப்புரட்சியின் 50ம் ஆண்டுவிழா
-எஸ்.ஏ.மாணிக்கம் 60

## சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 5.00 |
| 6மாத சந்தா | ரூ. | 30.00 |
| ஆண்டு சந்தா | ரூ. | 55.00 |

5 பிரதிகளுக்குமேல் ஏஜென்சி வழங்கப்படும்
25 சத கமிசன் உண்டு

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

மார்க்சிஸ்ட் மாத இதழ்
6/16, புறவழிச்சாலை, மதுரை — 625 018
Ph: 661769 Fax: 0452 - 660070
E-Mail : theekati@md3.vsnl.net.in

## கந்தர்வன் எழுதிய கதை:

# "பைமாஷ்"

# ஒரு ஆய்வு

**டி.இலட்சுமணன்**

இலக்கியமும், இலக்கிய ஆய்வும் மார்க்சீயத்தின் கூறுகளே

ஆனந்த விகடன், 31.10.99 (Sublement) தேதியிட்ட இதழில் கவிஞர் கந்தர்வன் எழுதிய "பைமாஷ்" எனும் தலைப்பு கொண்ட சிறுகதை ஒன்று வெளியாகியிருந்தது!

கண்ணுசாமி பண்டிதர் (சவரம், நாட்டு வைத்தியம் செய்வோரைப் பண்டிதர் என்றும் அழைப்பார்கள்) என்று அழைக்கப்படும் 60 வயது கொண்ட பெரியவர் – நல்லவர் – அப்பாவி – காலம் பூராவும் உழைத்தவர் – தேவையில்லாது, தன் தகுதிக்கு அதிகப்படியான ஒரு தொழில் ஆசையை, வர்ணாஸ்ரம தர்மத்திற்கு எதிராக – அதாவது வாரத்துக்கு பயிர் செய்யும் ஒரு தொழிலை விரும்பி செய்ய அதுவே அவரின் உயிரைக் குடித்து விட்டது. அதுதான் இந்தக் கதையின் சுருக்கம்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டுக் கொண்டிருந்தபோது ஜமீன்களின் அட்டகாசமும், குறுநில மன்னர்களின் கொட்டமும் கொடிகட்டி பறந்து கொண்டிருந்த காலத்தில் நடந்த கதைதான் இது!

எண்பது, நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த கதையாக இருந்தாலும் கண்ணுசாமியின் முடிவு – உயிர்ப் பிரிவு – இப்போதும் நம் உணர்வின் மீது சோக நிழலைப் படரவே செய்கிறது. அந்த வறியவர் அன்று மரித்துவிட்டார் என்பதற்காக மட்டுமல்ல, அந்த வரலாறு இன்னமும், இப்போதும் இந்தியாவில் தமிழகத்தில் நடந்து கொண்டுதானே இருக்கிறது என்பதை எண்ணுகிறபோது கூடுதல் துக்கப் பெருமூச்சால் நாம் திணறுகிறோம். வருகிற டிசம்பர் 25ம்தேதி வெண்மணி தினம்! கலகத்துக்கு பயந்து 42 பேர்– குழந்தைகள் – பெண்கள் – வயதானோர் என ஒரு வீட்டுக்குள் பதுங்கி, அஞ்சி, அடங்கி ஒளிந்துக் கொண்டிருந்தபோது, வீட்டுக்

கதவை இழுத்துப்பூட்டி, இரக்கமற்ற முறையில் ஆதிக்க வர்க்கம் அந்த அனைவரையும் தீயிட்டுப் பொசுக்கிய வரலாறு நம் கண் முன்னே இப்போதும் நிழலாடிக் கொண்டிருக்கிறது. அண்மைக் காலத்தில் பீகாரில் அடித்தட்டு மக்கள் அடுக்கடுக்காய் சுட்டுக் கொல்லப்பட்ட செய்திகள் அடுத்தடுத்து வந்து இந்தியாவையே வெட்கித் தலைகுனிய வைத்தன. இப்போதும் தமிழகத்தில் கூட தாழ்ந்து கிடக்கும் மக்களின் குடிசைகள் எரிக்கப்படுகின்றன. கழுத்துகள் சீவப்படுகின்றன. கற்பு சூறையாடப்படுகின்றன. சமூக அக்கறை கொண்டவர்களின் இதயக் கூட்டில் ஏற்கெனவே இது போன்ற சுமைகள் கனத்திருக்கின்றபோது, கண்ணுசாமி போன்றோரின் கதையினால் கூடுதலாக வலி ஏற்படுகிறது.

கதை ஆசிரியர் கந்தர்வன் கண்ணுசாமியின் ஓய்வுக்கால வேலைகளை வர்ணிக்கின்றபோது "அம்பலக்காரர், கல்வீட்டுக்காரர் என்று இரண்டொருவருக்கு பண்டிதர் வந்து முடி வெட்டி, முகம் மழித்தல், கை நகம், கால் நகம் நறுக்கிவிட்ட பின், பசி எடுக்க ஒரு வைத்தியம், முதுகு வலிக்கு ஒரு வைத்தியம் என்று அந்த ஊர்காரர்களுக்கு சொல்லிவிட்டுப் போனால்தான் திருப்திப்படுவார்கள். அந்த மாதிரி வீடுகளுக்கு மட்டும் தகரப் பெட்டியோடு எப்போதாவது போய் வருவார்" என உள்ளதை உள்ளபடி வர்ணிக்கிறார்.

இந்த வர்ணனைகளை வரி வரியாகப் படிக்கின்றபோது எங்கள் ஊரில் நடக்கும் சில கூடுதல் வேலைகளும் என் நினைவுக்கு வருகின்றன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அவர்களுக்குக் காலில் முள் குத்திக் கொண்டாலும் அப்படிப்பட்ட பண்டிதர்தான் வந்து அதை எடுக்கவேண்டும்.

பெரிய மனிதர்களுக்கு அக்குளையும் வழிக்க வேண்டும். அடியில்... (தமிழில் எழுத கூச்சமாய் இருப்பதால்) "Puble Hair"ஐயும் வழிக்க வேண்டும். பெரிய மனிதர் எழுந்து வேட்டியை அவிழ்த்து இரண்டு கைகளாலும் அகல விரித்து மறைத்துக் கொள்ள, பண்டிதர் முன்னால் அமர்ந்து கொண்டு இந்த இழி வேலையைச் செய்ய வேண்டும். சிறு வயதில் நான், என் மாமன் மகன்களோடு சேர்ந்துகொண்டு சற்று தள்ளி நின்று இந்தக் காட்சியைத் தமாஷாய் ரசிப்பதுண்டு! ஆனால் இன்று அந்த இழிவை எண்ணிப் பார்க்கின்றபோது ஆத்திரம் கொப்பளித்து வருகிறது. காலத்தின் மாற்றத்தால் அப்படிப்பட்ட கொடுமைகள் இப்போதெல்லாம் எங்கள் ஊரில் நடப்பதில்லை; அந்த இழிவெல்லாம் இப்போது மாய்ந்து போன அசிங்கங்கள்!

கதை ஆசிரியர், கண்ணுசாமி பண்டிதரை உருவகப்படுத்துவது, வர்ணிப்பது அப்பட்டமான அசலாய் இருக்கிறது.

"கண்ணுசாமி பண்டிதருக்குப் பிடரி வரை தொங்கும் முடி வெள்ளை வெளேரென்றிருக்கும், கனத்த மீசை பஞ்சுப் பொதியாயிருக்கும், முன்கை ரோமங்களும் நரைத்துவிட்டன" என்று அலங்கரிப்பது நான் சிறு வயதில் சென்னையிலிருந்து பள்ளி விடுப்பில் எங்கள் ஊர் சென்று தங்குகிறபோது அங்கு நான் கண்ட எங்கள் ஊர் பண்டிதரைத்தான் இப்படி எழுதுகிறாரா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது. ஒரே வித்தியாசம் எங்கள் ஊர் பண்டிதருக்கு மண்டை பின்புறம் லேசாக வழுக்கை போட்டிருக்கும்.

நான் விடுப்பில் ஊரில் உள்ளபோது எனக்கு எப்போதாவது காய்ச்சல் வந்துவிட்டால் அந்தப் பண்டிதர் ஏதோ இரண்டு சிறிய உருண்டை மாத்திரைகளை என் வாயில் போட்டு, அவரே பலவந்தப்படுத்தி என்னை விழுங்க வைப்பார். ஒக்காளம் (குமட்டல்) வரும். தலையைத் தட்டி சிறிதளவு வாயில் சுடுநீர் ஊற்றி மாத்திரைகளை விழுங்க வைத்து விடுவார்! அதை அவர் அவருக்கு கிடைத்த வெற்றியெனக் கருதி லேசாகப் புன்னகைத்து மிதப்போடு என் தலையை மெதுவாக வருடிவிடுவார்!

என் மாமி, அவருக்கு மோரோ, காப்பி தண்ணியோ கொடுக்கிறபோது பெரிய "ஜோட்தலை" (பெரிய அளவிலான குவளை) நிறையக் கொடுப்பார். அதை அவர் தன் தலையைச் சாய்த்து, ஓர் அரை அடி ஜோட்தலையை மேலே தூக்கி சிந்தாமல், சிதறாமல் குடிப்பார்! எச்சில் படக்கூடாதாம்! ஆனால் ஒரே மூச்சில் குடித்து முடித்து விடுவார்! என் மாமி, அவரை எங்கள் வீட்டின் கூடம் வரை வரவழைத்துதான் வைத்தியம் செய்யச் சொல்லுவார்! (அவர் எங்கள் மாமியின் வீட்டார் அனைவருக்கும் வைத்தியம் செய்வதால் என் மாமி தரும் சலுகை) அவரும் ஆற அமர உட்கார்ந்து எல்லாம் விசாரித்துப் பிறகுதான், வைத்தியத்தை தொடங்குவார். சிறு பொழுதில் எனக்கு இப்படிப்பட்ட பண்டிதர் ஒருவர் பரிட்சயப்பட்டிருந்ததால், கதை ஆசிரியரின் பண்டிதர் வர்ணனை என்னை நெருக்கமாகத் தொட்டது.

ஆசிரியரின் கதை சொல்லும் பாணி என்னை மிகவும் ஈர்த்தது. நான் பெற்ற அனுபவங்களை, நான் என் ஊரில் நீண்ட வருடங்களுக்கு முன்பு நேரில் கண்ட நிகழ்ச்சிகளை இவர் இப்போது இந்த சிறுகதையில் அள்ளித் தெளிக்கிறாரே எப்படி என்கிற வியப்பு என்னை ஆட்கொண்டது. ஒரு வேளை எல்லா ஊரிலும் இப்படித் தான் இருக்குமோ?

இதோ, கதையில் இன்னொரு காட்சி!

பண்டிதரின் வீட்டுப் பெண்கள் இரவு ஆனதும் தெருப் பிரித்து, சட்டிகளோடு வாசல்களில் அடங்கிய குரலில், "ஆத்தா கஞ்சி" என்று நிற்பார்களாம்!

என்ன ஒற்றுமை! எங்கள் கிராமத்திலும் இரவு நேரத்தில் இப்படித்தான் பண்டிதர் வீட்டுப் பெண்களும், ஏகாலி (துணி வெளுப்பவர்கள்) வீட்டுப் பெண்களும், பாத்திரத்தோடு வந்து "அம்மா" என்று ராகம் போட்டுக் கூப்பிடுவார்கள். "கஞ்சி" என்று கேட்க மாட்டார்கள்! "அம்மா" என்று கூப்பிடுகிறபோது அது ஓர் ஒய்யாரமாக இருக்கும், அவர்களைத் தவிர வேறு யாரும் அப்படிப்பட்ட ஓசையோடு கூப்பிடமாட்டார்கள். அந்த ஒசையிலேயே யார் வந்திருப்பதென்று வீட்டின் கடைசி கட்டில், சமையல் அறையில் இருக்கும் என் மாமிக்குத் தெரிந்துவிடும். இரண்டு பாத்திரத்தில் கட்டியான கேழ்வரகு கூழ் கொண்டு வந்து இரண்டு பேருக்கும் போடுவார்கள்!

சென்னையில் இருந்து பள்ளி விடுப்பில் ஊர் சென்ற நான் ஒரு நாள் இரவு திண்ணையில் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தபோது அந்தப் பெண்களிடம் "சோறு இல்லை, போங்கள்" என்று சொல்லிவிட்டேன்! அந்த இரண்டு பெண்களும் இதனால் அதிரவில்லை. யார் இந்தப் புதுப்பையன் என்ற வினாவைக் கேட்பதுபோல் என்னை உற்றுப் பார்த்தார்கள். உணவு கொண்டு வந்த என் மாமிதான் அதிர்ந்து விட்டார்கள்!

என்னை விருந்தினன் என்று கூடப் பார்க்காமல் (ஒரு வேளை நான் சிறுவன்தானே என்ற காரணத்தால்) எதிர்காலத்தில் அந்த வீட்டு மருமகனாகக் கூட வரலாம் என்பதையும் (அப்படி ஆகவில்லை) நினைத்துப் பார்க்காமல், என் முதுகில் படார் என்று அடித்து விட்டார்கள்.

அந்த இரண்டு பெண்களும் பதறிப்போய் "ஐயோ, ஏன் தாயே குழந்தையை அடிக்கிறீர்கள்"? என்று பதட்டத்தோடு கேட்டார்கள்! "பாவம் அதுக்கு என்ன தெரியும், சிறுசு" என்றார்கள்!

அந்த இரு பெண்களும் சென்றுவிட்ட பிறகு, என் மாமி சொன்னது:

"அப்படியெல்லாம் சொல்லக்கூடாது; பாவம், அவர்களுக்கு நாம் கட்டாயம் சோறு போடணும், காலம் காலமா போட்டோம், போடணும்" என்றார்கள். அப்போது எனக்கு இது ஏன் என்று தெரியாது! ஆம், அது சமூக மரபு, சமூக சட்டம்! அதை யாரும் மீறக்கூடாது! பண்டிகைக் காலத்தில் பலகாரங்களும் கொடுக்க வேண்டும்!

அவர்கள் செய்கிற சமூகப் பணிக்கு, ஊரார் செய்கிற சமூகக் கடமை, சமூகப் பரிவர்த்தனை, பல தலைமுறைகளாக அமுல்படுத்தப்பட்டு வரும் சமூகக் கட்டுப்பாடு! காலம் காலமாக செய்யப்பட்டு வரும் இப்படிப்பட்ட பணிகள் – துணி வெளுத்தல், தலை வழித்தல், ஏர்கால் செய்து தருதல், அறுவாள் அடித்துக் கொடுப்பது – இது போன்ற பணிகளை சமூகத்துக்கு செய்து தருகிறார்கள். இங்கே பணம் பரி

வர்த்தனையல்ல, அறுவடைக் காலத்தில் நெல்லும், பண்டிகைக் காலத்தில் புதுத் துணிகளும், அன்றாடம் இரவில் உணவும் சமூகக் கட்டாயமாக இந்த உழைப்பாளி மக்களுக்கு வழங்கப்படும். இந்த நெல்லைக் கொடுத்துத்தான் கடையில் புளியும், மிளகாயும், எண்ணெயும், உப்பும் பெறுவார்கள். முழுக்க முழுக்க பண்டமாற்றுதான்! அண்மைக் காலத்தில் கூட இந்தப் பழக்கம் எங்கள் கிராமத்தில் இருந்தது. சென்னை நகரத்தை ஒட்டிய கிராமமாக இருந்ததால் இந்தப் பழக்கம் இப்போது அற்றுப் போயிற்று. பணம் புழங்குகிறது, பழைய பழக்கம் அடிபட்டுப்போனது!

இந்த "பைமாஷ்" கதையில் பண்டிதரின் வீட்டுப் பெண்கள் இரவு வந்ததும் குறிப் பிட்ட வீடுகளில் "அம்மா கஞ்சி" என்று கேட்கிறபோது நிஜ நிகழ்ச்சிகள், நம் சொந்த அனுபவங்கள் நம் முன் வந்து நிற்கின்றன.

படைப்பாளி கந்தர்வன் பண்டிதரின் சிறப்பான திறமை ஒன்றை விவரிக்கிறார். அவர் நன்றாகப் பாடக்கூடியவர். பாமரர் பாடும் பாட்டல்ல, புலவர்கள் பொறாமைப் படும்படி எதுகை, மோனையோடு, இராகத்தோடு பாடும் திறமைப் பெற்றவர் என்று பூரிப்போடு சொல்லுகிறார். இப்பேர்பட்ட திறமைசாலிக்கு, அவதாரப் புருஷன் என்று சொல்லப்படும் கிருஷ்ணன் உபதேசம் தெரிய வாய்ப்பில்லை போலும்!

சாதுர்வர்ண்யம் மயாஸ்ருதஷ்டம்
குண – கர்ம விபாகச!

"நான்கு வருணங்கள் என்னால் உண்டாக்கப்பட்டவை; அவரவர்களுக்குரிய கருமங்களை (தொழில்களை) அவரவர் மீறாமல் செய்ய வேண்டும்; அதனை மாற்றி செயல்பட வைக்க அந்த வர்ண தர்ம உற்பத்தியாளனாகிய என்னால்கூட முடியாது"

அவரவர்கள் சாதிக்கு நிர்ணயித்த குலத் தொழிலை, அவரவர்கள் கட்டாயம் செய்ய வேண்டும். வேறு தொழிலுக்குப் போகக்கூடாது. மீறக்கூடாது, இப்படி மீறு வது சமூக அநீதி! பாவகாரியம்! இந்த நியதியை உருவாக்கிய கிருஷ்ணனாலேயே இந்த நியதியை மாற்ற முடியாதபோது, இந்தப் பண்டிதர் தலைமுறைத் தலைமுறை யாக தன் மூதாதையர்கள் செய்து வரும் தொழிலை விட்டு விட்டு விவசாயம் செய்ய துணிவு கொள்ளலாமா? அப்படி மீறினால் அதற்கு தண்டனை உண்டு! அதுதான் மரண தண்டனை! பண்டிதர் செய்த குற்றத்திற்காக அவர் மரணத்தைத் தழுவ வேண்டியதாயிற்று! – இப்படியெல்லாம் வியாக்கியானம் செய்வோர் இப்போதும் உண்டு.

ஆனால் அப்படிச் சொல்லுவோரின், நினைப்போரின் ஆதிக்கம் இன்னொரு

பக்கம் மெல்ல, மெல்ல வலுவிழந்தும் வருவது மகிழ்ச்சிக்குரியது.

தலைமுடி வெட்டும், தாடி வழிக்கும், நகம் வெட்டும் ஒரு கடைக் கோடி மகனுக்கு விவசாயம் செய்ய துணிவு வந்தது எப்படி? சம்பிரதாய மரபை உடைக்க எது உந்து சக்தியாக இருந்தது?

ஆங்கிலேயர் ஆட்சி வந்ததால், பல சமுதாய மரபுகள் ஏற்கெனவே உடைபட ஆரம்பித்துவிட்டன. ஒரு வேளை அவைகளையெல்லாம் பார்த்த காரணத்தால் பண்டிதருக்குத் தானும் ஒரு மரபை உடைத்தால் என்ன என்ற எண்ணத்தால் துணிவு கொண்டார்ரா?

அல்லது இவர் சொந்தமாக பாடல் கட்டி, எதுகை, மோனையோடு பாடக்கூடிய வல்லமைப் பெற்றிருந்தால், புலமை இருந்தால் திருவள்ளுவரைப் படித்திருந்தாரா?

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்

தொழுதுண்டு பின்செல்பவர்" – என்று வள்ளுவரே சொன்னக் காரணத்தால்,

"சுழன்று மேர்ப்பின்ன துலகம் அதனால்

உழந்தும் உழவே தலை" – என்று மேலும் திண்மையாக வேளாண்மையை வள்ளுவர் வலியுறுத்தியக் காரணத்தால் பண்டிதர் வள்ளுவரைப் பின்பற்றினாரா?

வேளாண்மையைப் பற்றி ஏன் வள்ளுவர் இப்படி வலிந்து பாடினார் என்பதின் உட்கிடக்கையை பண்டிதர் அறிந்திருந்தாரா?

நான்கு வருணத்தில் மற்ற மூன்று வருணத்தாரின் தொழில்கள் கௌரவிக்கப் பட்டக் காலத்தில் வேளாண்மை மட்டும் கீழ் தொழில், கீழவர் செய்யும் தொழில் என்ற சமூக இழிநிலை ஒரு காலத்தில் தமிழகத்திலும் இருந்தது. இதை எதிர்த்துதான் வள்ளுவர் போர்க் கொடி உயர்த்தி வேளாண்மைதான் ஆக மிகப்பெரிய தொழில், சமூகம் இயங்குவதற்கான ஆணி வேர், என்பதைக் காட்ட, வேளாண்மை பற்றி, வேளாண் குடி மக்கள் பற்றி, மண்ணோடு மண்ணாய் வாழும் அந்த மக்களைப் பற்றி, அந்த உழைப்பைப் பற்றி உயர்த்திப் பாடினார், போற்றினார், ஏற்றினார்.

கண்ணுசாமி புலவருக்கும் வள்ளுவரின் வாய்மை மீது மரியாதையும், மதிப்பும் ஏற்பட்டு வேளாண்மைத் தொழிலை மேற்கொள்ள விரும்பினாரா?

அல்லது சிறுகதையாளர் கந்தர்வன், அவரின் இந்தக் கதையில் குறிப் பிட்டதுபோல் கண்ணுசாமி பண்டிதருக்கு "ஒரு நாள் ராத்திரி வேளையில் பல வீட்டுப் புளிச்சக் கஞ்சியையும் ஒன்றாக்கிக் குடித்த வேளையில்தான் அவருக்கு

விவசாயம் செய்யும் ஆசை வந்ததா"?

அப்படியானால் அவர் நேற்று அந்தப் புளிச்சக் கஞ்சியைக் குடிக்கவில்லையா, முந்தாநாள் குடிக்கவில்லையா? வாழ்நாள் பூராவும் இப்படிக் குடித்துத்தானே வாழ்ந்து வந்துள்ளார். சில நேரங்களில் புளிச்சக்கஞ்சி, சில வேளைகளில் நல்ல கஞ்சி என்றாலும், புளிச்சக் கஞ்சிக்கு அவர் பழக்கப்பட்டவர்தானே? அந்த நேரத்து புளிச்ச கஞ்சி வேண்டுமானால் சலிப்பின் காரணமாக, அலுத்துப்போனதின் காரண மாக, விவசாயம் செய்ய வேண்டும் என்ற ஆசையைத் தூண்டி இருக்கலாம்! ஆனால் இந்த ஆசைக்கு எது அடித்தளமாக இருந்திருக்க முடியும்?

எத்தனை நாளைக்குத்தான் வழித்தல், மழித்தல் வேலையைச் செய்வது, எத் தனை நாளைக்குத்தான் யாசகம் எடுப்பது, தன் வாழ்க்கையிலும் சற்றேனும் முன் னேற்றம் காண வேண்டும். தானும் ஒரு கௌரவமான தொழிலை செய்ய வேண்டும் என்கிற வர்க்க உணர்வு – அடித்தட்டு மக்களுக்கு, தாங்களும் ஓரளவு முன்னேற வேண்டும் என்று இயற்கையாக எழுகிற வர்க்க வேட்கை, சமூக உரிமைதான் இவருக்கு விவசாயம் செய்ய வேண்டும் என்கிற ஆசையைத் தூண்டி உள்ளது! அவருடைய இதயத்தின் அடிவாரத்தில் நீண்ட நாட்களாக உறங்கிக் கொண்டிருந்த அந்த பூதம் விழித்துக்கொண்டது! அதற்குப் புளிச்சக்கஞ்சி ஒரு தூண்டுகோலாய் இருந்திருக்கிறது! இந்தப் பூதம் விழித்துக்கொண்டு அதன் வேலையை செய்கிறது என்கிற அத்தாட்சிக்கு கதை ஆசிரியரே ஒரு இடத்தில் மிக அழகாக கண்ணு சாமியின் செயலை வர்ணிக்கிறார்.

"மண் வெட்டியைத் தோளில் வைத்துக்கொண்டு தெருக்களில் ஒரு தடவை நடந்து விட்டுத்தான் வயலுக்குப் போனார். தான் ஒரு விவசாயியாகியிருப்பதை மற்ற வர்கள் தெரிந்து கொண்டார்களா என்பதை ஜாடையாக கவனித்தார்" – என்பதி லிருந்தே அவரின் சமூக அந்தஸ்திற்கான உரிமை வேட்கை தெற்றெனத் தெரிகி றது. சமூக அந்தஸ்துக்கான இந்த உரிமை வேட்கைதான் முழுக்க முழுக்க அவரை விவசாயத் தொழிலுக்கு ஈர்த்தது. ஆனால் இதற்காக அவர் பட்ட பாட்டை ஆசிரியர் யதார்த்தமாக விளக்குகிறார்.

பாவம், வெறுங்கையால் முழம் போடமுடியுமா? யார் யாரிடமோ கண்ணுசாமி பிச்சை கேட்க வேண்டியிருந்தது! ஏர் கேட்டு பிச்சை, விதை கேட்டு பிச்சை, நிலச் சொந்தக்காரனிடம் உடம்பைக் குறுக்கி குனிந்து வாரத்துக்கு பயிரிட கெஞ்சல் – சீ, இது என்ன பிழைப்பு! இதைவிட வீட்டுப் பெண்கள் "ஆத்தா கஞ்சி" என்று கேட்பதே கௌரவமாக இருப்பதாக அவருக்குத் தோன்றியதாம்! ஒரு மனிதனின்

கேவலப்பட்ட சங்கடமான நிலையை, ஏற்கெனவே கேவலப்பட்ட நிலை என்று எதை மனித மனம் எண்ணி கசந்துக் கொண்டிருந்ததோ, அதுவே இப்போது மேல் என்று நினைத்து ஆயாசப்படுவது மனித மனத்தின் விசித்திரமான வலைப் பின்னல்தான்! இதை ஆசிரியர் பொருத்தமாகவே குறிப்பிடுகிறார்.

இதைவிட நிலச் சொந்தக்காரனிடம் பவ்யமாக வாரத்துக்கு நிலம் பயிரிட கண்ணுசாமி அனுமதிக் கேட்டபோது, ஆசிரியர் மிக நேர்த்தியாக ஒரு வாசகத்தை நெய்கிறார்! இங்கே அவரின் எழுதுகோல் மதிப்புப் பெறுகிறது.

"நான் ஒரு தடவையாவது சொந்தமாக விவசாயம் பண்ண உத்தர்வு தரணும்"

இங்கே ஆசிரியர் "அனுமதி தரணும்" என்ற வாசகத்தைப் போடவில்லை. "அனுமதி தரணும்" என்று கேட்டுவிட்டால், அந்த வார்த்தையில் சற்று கனம் இருப்பதுபோல் தோன்றிவிடும். ஆகவேதான் "உத்தரவு தரணும்" என்று கேட்க வைக்கிறார். ஆங்கிலத்தில் "ஆர்டர்" என்பதற்கும், "பெர்மிஷன்" என்பதற்கும் இடையில் அதிக வித்தியாசம் உள்ளதுபோல்.

அதேபோல், "நான் ஒரு தடவையாவது சொந்தமாக விவசாயம் பண்ண..." என்ற வாசகத்திலும் ஆழமான அர்த்தம் மறைந்துள்ளது. "நான் சொந்தமாக விவசாயம் செய்ய"... என்று கேட்டுவிட்டால் விவசாயம் செய்ய வாய்ப்பு கிடைக்காமல் கூட போய்விடும்! ஓராண்டுக்கு விவசாயம் செய்கிறேன், ஆறு மாதத்துக்கு விவசாயம் செய்கிறேன் என்றால்கூட வாய்ப்பு பறிபோய் விடலாம்! அதனால்தான் நிலச் சொந்தக்காரனிடம் "நான் ஒரு தடவையாவது சொந்தமாக விவசாயம் பண்ண"... என்று கேட்க வைக்கிறார். "ஒரு தடவை" என்று சொன்னால் கூட வாய்ப்பு போய்விடலாம்! ஆகவே "ஒரு தடவையாவது" என்று ஏகாரம் போட்டும் கேட்க வைக்கிறார்! அடுத்த தடவை கூட அது நீடிக்காது என்ற சந்தேகம்!

ஆம், கதையில் கூட ஒரே ஒரு தடவைதான் கண்ணுசாமி விவசாயம் செய்கிறார், அதோடு அவர் மாண்டு போகிறார்! இந்த ஒரே தடவையாவது விவசாயம் பண்ணுவது என்பது உண்மையிலேயே ஒரே தடவையோடு முடித்து விடுகிறது. ஆதிக்கக்காரர்களால், அரண்மனை அட்டூழியத்தால் அவர் வாழ்வு முடிந்து போகிறது. ஆகவே, ஒரு தடவையாவது சொந்தமாக விவசாயம் பண்ண வேண்டும் என்பது கதை முடிவுக்கும் எட்டுவதால் சாமிக்கண்ணுவின் வாழ்வின் முடிவுக்கும் முடிவு கட்டுவதால், ஆசிரியர் இந்த வாசகத்தை சூசகமாக நிலச் சொந்தக்காரனிடம் சொல்ல வைத்தார் போலும்.

மத்தியதர வர்க்கத்தின் பொருளாதார நெருக்கடியைப் பற்றி கூட போகிற

போக்கில் சுட்டிக்காட்டுகிறார்.

அரண்மனையில் வேலை செய்யும் குமாஸ்தாவின் வீட்டுக்கு தலையாரி சாமான் வாங்கி குமாஸ்தாவின் முன் வைக்கிறார். குமாஸ்தா கேட்கிறார். 'என்டா இது. ஒரே ஒரு சாக்கு நிறைஞ்ச மளிகை சாமான்களுக்கு ஒண்ணே முக்கா ரூபாய் ஆயிருச்சா"?

அதைக் கேட்ட இன்னொரு குமாஸ்தா சொல்லுகிறார்! "வெலைவாசி எக்கண்டமா ஏறிக்கிட்டிருக்கு". எரிச்சலடைந்த முதல் குமாஸ்தா சொல்லுகிறார், "மாகாராஜா குடுக்கிறது மாசம் பத்து ரூபா சம்பளம். மளிகைக்கே ஒண்ணே முக்கால் ஒடிருச்சு"

இப்படி கதை சொல்லும் பாணி பல இடங்களில் கலை கட்டுகிறது. அர்த்தங்கள் நயமாகச் சொல்லப்படுகின்றன. இதோ மற்றொரு சான்று.

ஊரில் மழை பொய்த்துவிட்டால் மழையை வரவழைக்க ஊரார் மழைச் சோறு எடுத்துக்கொண்டு காட்டுக் கோயிலுக்குப் போவார்கள். கண்ணுசாமி பண்டிதரை அழைத்து பாடச் சொல்லுவார்கள்; கோயிலுக்கு அருகே அவர் போக முடியாது! ஆனால் காட்டுக் கோயில் உலகம்மை நாச்சிக்கு அவரின் அந்தப் பாடலைக் கேட்க வேண்டும். அந்தப் பாடல் ராகத்தில் நனைந்த உலகம்மை நாச்சி, மழையால் பூமியை நனைய வைப்பாள். இது ஊராருக்குத் தேவைப்பட்டது. அதற்கு மட்டும் கண்ணுசாமி பண்டிதர் தேவைப்படுகிறார். அதேபோல் அவர் பாடும் இனிய ராகத்தில் அந்த மக்கள் மூழ்கிப் போவார்கள். மெய்ச் சிலிர்த்துப் போவார்கள். அந்த நேரத்தில் மட்டும் அவர் யார் என்பதை ஊரே மறந்து போகும். ஆனால் மறுநாளே முடிவெட்டச் சொல்லி ஆள் விடுவார்கள். இங்கேதான் கதையாசிரிய கந்தர்வன் சமூகத்தில் நிலவும் சாக்கடை தனத்தை மிக நாசுக்காக படம் பிடித்துக் காட்டுகிறார்; சொல்ல வேண்டிய அவலத்தைச் சொல்லாமல் சொல்லுகிறார்.

கதையில் வரும் கதாநாயகர் கண்ணுசாமி விவசாயத்தை வெற்றிகரமாக முடித்து விடுகிறார். ஆனால் அதற்காக அவர் பட்ட உழைப்பு, பட்டபாடு சொல்லி முடியாது. கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராக இருந்த விளைச்சலைக் கண்டு அவர் பெற்ற மகிழ்ச்சி சொல்லி முடியாது! ஆனால் விளைந்த நெல் வீடு வந்து சேராமல் போனதுதான் பெரும் இடி, பெரும் புயல்!

ஆதிக்க சக்திகள், அரண்மனைக்காரர்கள் அவரின் உழைப்பை – விளைந்த நெல்லை சூறையாடி விட்டார்கள். எதையாவது சொல்லி ஏழை விவசாயியைச் சுரண்ட வேண்டும். ஆனால் அப்பாவியான அவருக்கு, அரண்னைக்காரர்கள் நேரடி

யாக களத்து மேட்டுக்கு வந்து தன் விவசாய விளைச்சலைப் பார்த்து அங்கீகரிக்க வந்துவிட்டார்கள் என்று தோன்றியது! அதுமட்டுமா? மேலும் சில விசித்திரமான எண்ணங்கள் அவருக்குத் தோன்றின.

தானும், தன் குடும்பமும் ஊருக்குச் செய்யும் சேவகம் காரணமாக சலுகைகள் இருக்கும்! அதற்காகத்தான் அரண்மனை ஆட்கள் வந்திருப்பதாகவும் நினைத்துக் கொண்டார்!

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இப்போது அரசாங்கம் சலுகைகள் வழங்குவதுபோல் இருக்கிறது, அவரின் அந்தக் காலத்து எதிர்பார்ப்பு! அடிதட்டு மக்கள் அப்படி சலுகைகளை எதிர் பார்ப்பது இயற்கைதானே! அப்படிப்பட்ட அந்த இயற்கையான குணம் கண்ணுசாமி பண்டிதருக்கு வந்தது நியாயமானதுதான்! கதைப் படைப்பாளி இப்படிப்பட்ட இயல் பான, இயற்கையான எதிர்பார்ப்பை கண்ணுசாமியிடம் பதிய வைத்தது பாராட்டு தலுக்கு உரியது! ஆனால் உலகம் வேறுதவிதமாக அல்லவா இருக்கிறது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான கண்மாய் தண்ணீர் பாயும் எந்த நிலத்தின் ஒப்படியின்போதும், பாதி நெல் அரண்மனைக் களஞ்சியத்துக்கு என்கிற சட்டம் கண்ணுசாமி பண்டிதர் மீதும் கடுமையாகப் பாய்ந்தது. அந்த அளவு அரண் மனைக்கு போக, வரி வசூல் செய்யும் அரசாங்க ஊழியர்களின் வழிச் செலவுக்குக் கொஞ்சம் கூடுதல் அளவு நெல்லும் கொள்ளை போயிற்று. அதை லஞ்சம் என்றும் இன்றைய மொழியில் சொல்லலாம். இன்றும் நீடிக்கும் இந்த உள்ளடி – லஞ்சம், அன்று வேறு பெயரில் நீடித்தது, அவ்வளவே! அதன் பிறகு மிச்சமுள்ள நெல்லில் ஒரு பகுதியை நிலச் சொந்தக்காரருக்கு வாரத்துப்போக, மீதி கிடந்த நெல்லில் அறுத்த ஆட்களுக்கு... ஏர் தந்தவர்களுக்கு... இப்படிக் கழிய, கண்ணுசாமி பண்டிதர் அப்படியும் ஏதேனும் மிச்ச நெல் இருந்தால் அதை அவர் கையில்தான் அள்ளிக்கொண்டு வீட்டுக்குப் போக வேண்டும்.

ஏழை விவசாயி கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலேயே சாவான் என்பது உண்மைதான் போலும்.

பாவம், பண்டிதரின் கனவு, ஆசை, பெருமை, சந்தோஷம், நம்பிக்கை எல்லாம் தவிடு பொடியாகி விட்டன! இனி மிச்சம் என்ன இருக்கிறது!

இந்தச் சுரண்டல், இந்தக் கொள்ளை, இந்த மோசடி அவரை எரிமலையாக்கி விட்டது! இனி அவருக்கு எல்லாம் தூசிதான்! 'துணிந்துவிட்டவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டும்' – என்று சொல்லுவது உண்மைதான், துணிவு, தைரியம், ஆண

வம், ஆக்ரோஷம், அத்துணையும் ஒருங்கே கூடி, சமூக அடிதளத்தில் வாழும் அந்த மனிதரிடம் இவ்வளவு நாளாக உறங்கிக் கொண்டிருந்த ருத்திர தாண்டவம் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது. சற்று நேரத்துக்கு முன்னால் பங்கு அளக்க வந்த பைமாஷ் செய்ய வந்த அரண்மனை அதிகாரிகளின் முன் நெடுஞ்சாண் கிடையாக விழுந்த அந்த மனிதரா இவர்?! இல்லை. இப்போது இவர் வேறு ஒரு அவதாரம்! வர்க்கப் போர் நடத்த எழுந்துவிட்ட நெருப்பு மனிதர்! தன்னந்தனியாக அநீதியை எதிர்த்துப் போரிட துணிந்துவிட்ட வரலாற்று மனிதர்! மரணம் இப்போது அவருக்கு மலர் மாலை!

இந்தச் சிறுகதையைப் படித்தபோது கண்ணுசாமியின் பாத்திரம் எனக்கு இப்படித்தான் தோன்றியது!

ஆகவேதான் ஆசிரியர் கூட அவரின் போராட்டத்தை கோர்வையாக கலைநயத்தோடு வர்ணிக்கிறார்.

அ. நெல் மூட்டைகளை எடுத்துச் சென்ற அரண்மனை வண்டி முன் பாய்ந்து இரண்டு கைகளாலும் மறித்தார்.

ஆ. யார் முன்னும் இதுவரை தொட்டறியாத தனது வெளுத்த மீசையை எல்லார் முன்னிலையிலும் முறுக்கியபடி நின்றார்.

இ. இப்போது ஆக்ரோஷமாகச் அடிவயிற்றிலிருந்து எழும் நாதம்! உரக்கப் பாடுகிறார்! பாடலில் தீ எரிகிறது:

*"பரந்த வயலாம் நரைத்த முடியாம்*

*பைமாஷுக்கு ரெண்டேடாம்*

*எரிக எரிக ஏடெல்லாம் எரிக*

*காட்டுக் கோயில் உலகம்மை நாச்சியே*

*கடிந்துவா விரைந்துவா*

*வா, வா, வா, வா,வா"*

ஈ. பண்டிதர் வீட்டு ஆண்களும், பெண்களும் அவர் கைகளைப் பிடித்து இழுத்தனர். பாறைபோல் கைகளை விரித்தபடி திரும்பத் திரும்பப் பாடியபடி நின்றார், அவருடைய பலம் அசாத்தியமாக இருந்தது. அவரை அசைக்க முடியவில்லை.

உ. பண்டிதர் வண்டி முன் குப்புறப்படுத்தபடி பாடிக்கொண்டே இருந்தார். (இங்கு

பண்டிதரை யாரும் தள்ளவில்லை, தள்ளமுடியாது, அவராகவேதான் குப்புறப்படுத் தார்)

ஏ. பண்டிதரை மீட்க வந்த வீட்டு ஆட்களை அரண்மனை ஆட்கள் விரட்டியபடி இருக்க, பார வண்டியின் சக்கரங்கள் பண்டிதரின் கழுத்தில் ஒன்றும், காலில் ஒன்றுமாக ஏறி இறங்கின.

ஏ. அன்று நள்ளிரவில் கண்ணுசாமி பண்டிதரின் ஆவி அவர் வீட்டுத் திண்ணையில் பிரிந்தது.

இப்படி கதை ஆசிரியர் பண்டிதரின் வரலாற்று முடிவை முடித்து வைக்கிறார். அதிலும் நள்ளிரவில் அவரின் ஆவி பிரிந்தது -- என்கிறார்.

சூரியன் கூட, பண்டிதர் உயிர் விடுவதைக் காண சகியாமல் கருப்புச் சட்டை அணிந்து மறைந்துவிட்டன போலும்!

பண்டிதர் இறந்துவிட்டார் என்பது உண்மை! ஆனால் அவர் இன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். மக்கள் மனதில் உறைகிறார்! எப்படி?

ஆசிரியர் சொல்லுகிறார்! சாகும் தருவாயில் பண்டிதர் பாடிய அந்தப் பாடல் ஊர் மக்கள் வாயிலிருக்கிறது. அவர் இறந்த நாளான ஒவ்வொரு தை பதினெட்டன்றும் களத்து மேட்டில் ஊன்றியிருக்கும் கல்லுக்கு பொங்கல் வைத்துப் பூஜை நடக்கிறது.

புரட்சியாளர் தனி மனிதராக இருந்தாலும் இறப்பதில்லை. மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார் என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

ஆசிரியர் இந்தக் கதையில் கண்ணுச்சாமி பண்டிதரைக் குறிப்பிடும்போதெல் லாம் "அவர்" "அவர்" என்றே எழுதுகிறார்! "அவன்" என்று எழுதவில்லை. ஏன்? அவன் என்று எழுதினால் பெரிய குற்றமில்லை. ஆனால் ஏன் அவர் அப்படி எழுத வில்லை?

பண்டிதருக்கு வயது 60 ஆகிவிட்டிருந்ததால் வயதுக்கு மதிப்பு அளித்து அப்படி எழுதினாரா?

அல்லது உரிமைக்காகப் போராடி, அநீதியை எதிர்த்து மாண்டு போனாரே, அந்தத் தியாகத்துக்கு மதிப்பு அளிக்கும் வகையில் "அவர்" என்று மரியாதைக் கொடுத்து எழுதினாரா?

அல்லது அந்தப் பாத்திரத்தின் கௌரவத்தை உயர்த்திப் பிடிக்க அவரை 'அவர்' என்று எழுதி மன ஆறுதல் அடைந்தாரா?

அல்லது அவர் உழைப்பாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால், புரட்சியாளராக மாண்டாரே, அதனால் வர்க்க சார்பு நிலையில் நின்று அவரை 'அவர்' என்று குறிப்பிட்டு எழுதினாரா?

ஆம், அவர் 60 வயது முடிந்த பெரியவர், உழைப்பாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர், அஞ்சாது அநீதியை எதிர்த்துப் புரட்சிக்காரராக ஆவி பிறந்தவர்! ஆகவே ஆசிரியர் சார்பு நிலையில் நின்று அந்தப் பாத்திரத்தின் கௌரவத்தைத் தூக்கிப் பிடிக்கவே கண்ணுச்சாமி பண்டிதரை "அவர்" என்றே மரியாதையோடு மனமுவந்து குறிப்பிடுகிறார்; வலிந்து அல்ல!

ஒரு படைப்பாளிக்கு, ஒரு கலைஞனுக்கு சார்பு நிலை என்பது தவிர்க்க முடியாதது. பைமாஷ் என்னும் இந்த சிறுகதையில் எழுத்தாளர் கந்தர்வன் உழைப்பாளி சார்பு நிலையில் நின்று எழுதியுள்ளார்! உணர்வுப்பூர்வமான படைப்பு! ஆகவே இந்தப் படைப்பு பாராட்டுப் பெறுகிறது!

(பி.கு.) "பைமாஷ்" என்பது "பைமாயிஷ்" என்று அரபு மொழியில் சொல்லப்படுகிறது. மொகலாயர்கள் இந்தியாவை ஆண்டபோதே இந்த வார்த்தை நிர்வாகத்தில் வந்துவிட்டது. நில அளவிடுவதை "பைமாஷ்" என்று சொல்லுவார்கள். இப்போது அது மருவி "பைமாயிஷ்" என்று சொல்லப்படுகிறது.

# கீதையின் அடிப்படை

# (அ)

# கீதை காட்டும் தத்துவ அகழி

- சு.பொ.அகத்தியலிங்கம்

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

பெரும்பாலான மக்களுக்கு சமஸ்கிருதம் தெரியாது. சமஸ்கிருதப் புலமை மிக்கவர்கள் மிக மிகக் குறைவு. விரல் விட்டு எண்ணி விடலாம். எனவே சுலோகங்களை பொட்டை நெட்டுருப்போட்டு கூறிவிட்டு தற்போதைய தேவைக்கு ஏற்ப ஏற்றி இறக்கி கூட்டிக் குறைத்து கூறி இந்துத்துவ வாதிகள் தப்பித்து வருகின்றனர். நுட்பமாக பார்க்கும் கி.வீரமணியின் பார்வையில் இது எப்படியோ தப்பித்துவிட்டது!

பகவத் கீதையில் வர்ண தர்மத்தை நானே உருவாக்கினேன் என்று கூறுவது மட்டுமல்ல. இப்பிரிவினர் என்னென்ன வேலை செய்ய வேண்டும் என்றும் கிருஷ்ணனே–கடவுளே கட்டளையிடுகிறார். ஆண்டவன் எழுதியதை அடித்தெழுதுவது சாத்தியமா என்று இன்றைக்கும் கேட்கும் உலகில், அன்று ஆண்டவன் வாய்வழி சொன்ன வேதங்களின் சமூக சக்தி அளவிடக் கூடியதோ?

## நாலு வர்ணக் கடமை

பிராமண கர்மமாக கீதை சொல்வதென்ன?

**ஸ்மோ தமஸ்தப: ஸ்வுசம் சஷாந்திரார் ஜவமேவச**

**ஜ்ஞானம் விஜ்ஞானமாஸ்திக்ய ப்ரஹ்ம கர்ம ஸ்வபாவஜம்**

**(கீதை 18.42)**

"அகக் கரணத்தை அடக்குதல், புறக் கரணத்தை அடக்குதல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், கல்வி, ஆத்திகம் இவை இயல்பிலே தோன்றும் பிராமண கருமங்களாகும்."

சத்திரிய தர்மமாக கீதை கட்டளையிடுவது எதை?

''ஸவுர்யம் தேஜோ த்ருத் தாசஷிண்யம்

யுத்தே சாப்ய பலாயனம்

தான மீஸ்வர பாவஸ்ச சஷாத்ரம்

கர்ம ஸ்வபாவஜம்''

**(கீதை 18.43)**

"சூரத்தன்மை, ஒளி, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, ஈகை, இறைமை– இவை இயல்பிலே தோன்றும் ஷத்திரிய கர்மங்களாகும்.

வைசியர்கள், சூத்திரர்கள் கடமை என்ன?

**''க்ருசஷி கோரசஷ் வாணிஜ்யம் வைஸ்ய கர்மம் ஸ்வபாவஜ**

**பரிசர் யாத்மகம் கர்ம சூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம்''**

**(கீதை 18.44)**

"உழவு, பசு காத்தல், வாணிகம், இவை இயற்கையிலேயே பிறக்கும் வைசிய கர்மங்களாகும்.

தொண்டு புரிதல் சூத்திரனுக்கு அவனியற்கையால் ஏற்பட்ட தொழில்"

பிராமணனுக்கு கல்வி, ஞானம், தவம் என உயர்ந்த கடமைகளைப் பணித்த கிருஷ்ணன்; ஷத்திரியர்களுக்கு போர்த்தொழிலையும் கொடையையும் கடமை யாகப் பணித்த கிருஷ்ணன்; விவசாயமும் வியாபாரமும் வைசிய கடமை எனப் பணித்த கிருஷ்ணன்; மற்ற மூன்று வருணத்தாருக்கும் தொண்டு செய்வதே– ஊழியம் செய்வதே சூத்திரர் கடமை என கட்டளையிட்டு நசுக்கினான்.

## கடவுளின் மிரட்டல்

சரி... இப்படிச் சொல்லிவிட்டால் போதுமா? போதாதே... இதைச்செய்தால் உனக்கு என்ன கிடைக்கும் செய்யாவிட்டால் என்ன கிடைக்கும் என்பதைக் கூறினால்தானே பக்தர்கள் பயந்து ஒழுகுவார்கள். அதையும் கீதை செய்கிறது.

**ஸ்வேஸ்வே கர்மண்ய பிரத: ஸம்ஸித்திம்ல**

**பதேபராம் ஸ்வகர்ம நிரத: ஸித்திம் யதாவிருதி தச்ருணு,**

**(கீதை 18.45)**

"தனக்குத் தனக்கு உரிய கர்மத்தில் மகிழ்ச்சியிலும் மனிதன் ஈடேற்றம் பெறுகிறான். தனக்குரிய தொழிலில் இன்புறுவோன் எங்ஙனம் சித்தி அடைகிறா

னென்பது சொல்கிறேன் கேள்"

**"யத: ப்ரவ்ருர்த்திப் பூதானாம் யேன ஸர்வமிதம் ததம்**

**ஸ்வகர்மண தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததிமானவ:"**

**(கீதை 18.46)**

"உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடமாய், இவ்வையக மனைத்திலும் நிறைந்திருக்கும் கடவுளை தனக்குரிய கர்மத்தால் பூஜை செய்யும் மனிதன் ஈடேறுகிறான்"

ஆக ஒரு மனிதன் சந்தோஷம் அடைவதும், நற்கதி எய்துவதும் அவரவர் கடமையை அதாவது வர்ணாஸ்ரமம் விதித்த கடமையை அட்டியின்றி செய்வதில் தான் அடங்கி இருக்கிறதாம். தொண்டூழியம் செய்வதால் மட்டுமே சூத்திரனுக்கு கதிமோட்சம் கிடைக்கும்; இப்படி கடவுளே (!) மிரட்டினால் பாவம் மக்கள் என்ன செய்ய முடியும்.?

## வர்ணதர்ம எச்சரிக்கை

ஆயினும் கீதை வேறு வேறு வார்த்தை ஜாலங்களில் இதை மேலும் ஆணி அடிக்கிறது.

"பிறர்க்குரிய தர்மத்தை நன்கு செய்வதைக் காட்டிலும் தனக்குரிய தர்மத்தை குணமின்றிச் செய்தலும் நன்று. இயற்கையிலேற்பட்ட தொழிலைச் செய்வதனால் ஒருவன் பாவமடைய மாட்டான்"

**(கீதை 18.47)**

"குந்தி மகனே! இயல்பான தொழில் குற்றமுடையதாயினும் அதைக் கை விடலாகாது தீயைப் புகைச் சூழ்ந்திருப்பதுபோல் எல்லா தொழில்களையும் குறைகள் சூழ்ந்தே நிற்கின்றன"

**(கீதை 18.41)**

இப்படியெல்லாம் வலியுறுத்திக் கூற வேண்டிய காலம் அது. அதற்கேற்ப கீதை புனையப்பட்டது. எனவே கீதை ஆரம்பத்திலேயே கீதை முதல் அத்தியாயத்தில் 39 முதல் 44 வரை உள்ள சுலோகங்களில் யுத்தம் வந்தால் குலம் அழியும், அதர்மம் சூழும். குலஸ்திரிகள் கெட்டுப் போவார்கள், வர்ணக் கலப்பும், வர்ணக் குழப்பமும் ஏற்படும், சாதி தர்மங்கள் குல தர்மங்கள் அழிந்துபோகும் என்றுதான் அர்ஜுனனும் விசனப்படுகிறான். அவனுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் .தரும் சாக்கில் வர்ண தர்மத்தை நிலைநாட்ட வாய்ப்பு கிடைத்த இடத்தில் எல்லாம் கீதை பேசுகிறது. அர்ச்சுனன் ஷத்திரியன், அவன் கர்மம் போர் செய்தல் என்று கூறி போரில் ஈடுபட தூண்டுகிறார்.

கி. வீரமணி தம் நூலில் சரியாக ஒரு அம்சத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

"நன்றாக அனுஷ்டிக்கப்பட்ட பிற தர்மங்களைக் காட்டிலும் தனக்கென்று ஏற்பட்ட தர்மம் குணமில்லாததாக இருப்பினும் உயர்ந்தது. தன்னுடைய தர்மத்தில் அழிவதே மேல். பிற தர்மம் ஆபத்தை விளைவிக்கும்.

**"ச்ரயோன் ஸ்வதர்மோ விகுண:**
**பரதர்மாத் ஸ்வனுஷ்ட்டிதாத்**
**ஸ்வதர்மே நிதனம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ:"**

**( அத்.3.சுலோ.35)**

எவ்வளவு மோசமானதாக இருப்பினும் ஒருவரது குலதர்மமே அதாவது ஒழுக வேண்டிய கடமைப்படி குலத்தொழிலே சிறந்தது. உயர்ந்ததாக மற்றது இருப்பினும் கூட வேறு தொழிலை குலதர்மத்தை செய்யாமல் வாழ முடியாவிட்டாலும் அழிந்து விடலாம் என்பது எவ்வளவு மோசமான கட்டளை!

**(கீதையின் மறுபக்கம்–பக்கம் 108)**

பகவத் கீதைக்கு விளக்கம் அளிக்கும் சுவாமி சிவானந்தர் விளக்குகிறார்:

"தன்னுடைய தர்மத்தை சிறிது மோசமாகச் செய்வது பிறதர்மத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதைவிட நல்லதே. மற்றொருவருடைய தர்மத்தை செய்தால் நரகம் போன்ற எதிர்ப்புகளை மேற்கொள்ள வேண்டியது வரும். ஷத்தியரின் கடமை தர்ம யுத்தத்தில் போர் புரிவதுதான். அர்ஜுனன் போர் செய்தே தீர வேண்டும். அதுதான் அவருடைய தர்மம். அந்தத் தர்மம் செய்வதற்கு இடையில் அவர் இறந்தால் அது அவருக்கு நல்லது; அவர் சொர்க்கத்திற்கு செல்வார். மற்றொருவரு டைய தர்மத்தை அவர் மேற்கொள்ளக்கூடாது. அது அவருக்கு ஆபத்தை உண்டாக்கும்"

## வர்ணாஸ்ர தர்மகாப்பே

கேட்டீர்களா! கதையை! இதுதான் கீதை. இதுதான் வர்ணாஸ்ரம். மலத்தை அள்ளி சாக்கடையைச்சுத்தப்படுத்தும் ஒருவன் தலித் ஆனால் அவனது குலக்கடமை அதுதானாம். அதைச்செய்வதில்தான் அவனுக்கு உயர்வு. அதில் விஷப்புகை தாக்கி அவன் செத்துப்போனாலும் அவனுக்கு சொர்க்கமே. ஆனால் தவறியும் அவன் படித்து மேல் நிலைக்கு வருவது பாவம். மீனாட்சியம்மன் கோவில், கபாலீஸ்வரர் கோயில் பூசாரியாவது அதைவிட பாவம். அனுமதிக்கவே முடியாது. ஆகவேதான் அரிஜனங்கள் ஆலய அர்ச்சகர் ஆவதை தடுத்து நிறுத்திட நீதி மன்றம் சென்றனர் இதே இந்துத்வா கூட்டத்தினர். இதை ஏன் கூறுகிறேன் என்றால் பகவத் கீதை ஏதோ ஒரு வகையில் சாதிய ஆதிக்கத்தை நிலை நிறுத்த

இன்றும் உதவிக் கொண்டிருக்கிறது என்பதே.

கீதை நெடுக்க வர்ணாஸ்ரமத்தை நியாயப்படுத்தி வலியுறுத்தி நிறைய சொல்லப்பட்டுள்ளது.

**மாம் ஹி பார்த்தா!**

**வ்யாபா, ரித்ய**

**யே பிஸ்யூ: பாபயோயை:**

**ஸ் த்ரீயோ வைஸ்யாய்ததா் சூத்ரா-**

**ஸ்தேயி யாந்தி பராம்சுதிம்''**

**(கீதை 9.32)**

"பார்த்த,! பெண்களோ, வைசியரோ, சூத்திரரோ, நீச குலத்தில் பிறந்தவரோ யாரானாலும் அவர்கள் என்னை வணங்குவர் ஆயின் பரகதி அடைவார்கள்."

**''கிம்புனர் ப்ராஹ்மணா: புண்ய பக்தா ராஜர்ஷா யஸ்ததா**

**அனித்யமஸுகம்**

**லோ சுமிமம்**

**ப்ராய்யப**

**ஜஸ்வ மாம்''**

"அப்படி இருக்க தூய்மையான பிராமணர்களும் ராஜரிஷிகளும் உத்தம கதியை அடைவதைப் பற்றி சொல்லவும் வேண்டுமோ? ஆதலால் நிலையற்றதும் இன்பமற்றதும் ஆகிய இவ்வுலகப் பிறவியை அடைந்த நீ என்னை வழிபடுவாயாக!"

பெண்கள், வைசியர்கள், சூத்திரர்கள், நீச குலத்தில் பிறந்தவர்கள் ஆகியோர் தாழ்ந்தவர்கள் என்றும் பிராமணர்களும் சஷத்திரியர்களும் உபர்ந்தவர்கள் என்றும் கிருஷ்ணன் நிலை நாட்டுவதாக கீதையில் கூறப்பட்டுள்ளது.

உயர் குலம், தாழ்குலம் என்று தரம் பிரித்து கடமை வகுத்தவன் எப்படி ஆண்டவனாக-பகவானாக இருக்க முடியும்? அப்படி இருந்தாலும் அவன் எல்லோருக்குமான கடவுள் அல்ல. அவன் பிராமணர்களை ரட்சிக்கும் கடவுளே. அவன் அருளியதாகக் கூறப்படும் கீதையின் நோக்கங்களில் பிரதானமானது. முக்கியமானது வர்ணாஸ்ரமத்தை பாதுகாப்பதே.

# IV - கீதையின் பல முகங்கள்

"கீதையின் மறுபக்கம்" எனும் நூலில் கி. வீரமணியும், "பகவத் கீதை ஓர் ஆய்வு" எனும் நூலில் ஜோசப் இடமருகும் கீதையின் வர்ணாஸ்ரம கோட்பாட்டை தோலுரித்துக் காட்டுவதில் ஏறத்தாழ ஒரு மாதிரி செயல்பட்டுள்ளனர். அது முதற்கட்டத் தேவை. அதற்கு மேலும் சில செய்திகளை வலியுறுத்திக்கூற வேண்டியுள்ளது. எஸ்.ஸி. சர்தேசாயும் திலிப் போசும் "மார்க்சியமும் பகவத் கீதையும்" என்கிற நூலில் அப்பணியைச் செய்துள்ளனர். அதிலிருந்து சில செய்திகளை நாம் சற்று புரட்டுவோம்.

**பாவிகளென்னைப் பணிவாராயின்**
**மாதரேனும் வைசியரேனும்**
**சூத்திரமும் பரகதி பெறுவார்**

**(கீதை 9.32)**

பெண்கள், வைசியர்கள், சூத்திரர்கள் 'பாவப் பிறவிகள்' என்று உறுதி செய்யும் பகவத் கீதை என்னிடம் பக்தி செலுத்தினால் மோட்சம் செல்லலாம் என்று கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியதாக எழுதப்பட்டுள்ளதே அந்தக் காலத்தின் கட்டாயம்.

## கிருஷ்ணன் சரணம் கச்சாமி

புத்தர் வருகைக்கு முன் உபநிடத காலத்தில் பிராமணர்களுக்கும் ஷத்திரியர் களுக்குமே மோட்சம் செல்லும் பாதை கூறப்பட்டிருந்தது. புத்தரின் வருகையால் அடிபட்டு வீழ்ந்த பிராமணியம் மீண்டும் எழ பெண்கள், வைசியர்கள், சூத்திரர்கள் எல்லோருக்கும் சொர்க்க வாசலை காட்ட முன்வந்தார். அது அவரின் கருணை அல்ல. அந்த காலகட்டத்தின் நிர்பந்தம்.

அதே சமயம் ஒரு சிக்கலும் வருகிறது. ஒன்று'தவமார்க்கம்' எல்லோருக்கும் பொருந்துமா? அடுத்து தவம் செய்ய எல்லோரும் போய்விட்டால் என்ன செய்வது?

" உபநிடதங்கள் சுட்டிக்காட்டிய ஒரே பாதை தவம், ஞானமார்க்கம் ஒன்றுதான், ஆனால் அதை எளிதில் கையாள முடியாத புதிர் நிறைந்த மறைபொருளாக உள்ள–பாசம் நிறைந்த ஆத்மாவும் பிரம்மமும் கீழ்நிலை மக்களுக்கு இந்த தவமார்க்கம் பொருத்தமில்லாததாம். அது பிராமணர்களுக்கும் ஷத்திரியர்களுக்கும் ஏகபோகமாக இருந்தது. அந்த மேல்தட்டுக் கூட்டத்திற்கு அவர்களுக்குத் தேவையான பொருட்களை உண்டாக்கிக் கொடுப்பதற்கும் அவர்களுடைய வசதி வாய்ப்புகளை பாதுகாப்பதற்கும் சூத்திரர்களின் கடுமையான உழைப்பு தேவைப் பட்டது. எனவே கீழ்நிலை மக்கள் வாழ்க்கையிலிருந்து விடுபட்டு துறவியாகி காட்டிற்கு சென்று தவம் செய்வதற்கு யார் அனுமதிப்பார்கள்? அதை அனுமதித் தால் மேல்தட்டுக் கூட்டங்களின் வசதிகளுக்கான பொருளாதாரம் என்ன ஆவது?"

கீதை அதற்கு ஒரு எளிய வழியைக் கண்டு பிடித்தது.

"இலையேனும், பூவேனும், கனியேனும், நீரேனும், அன்புடன் எனக்கு அளிப்ப வன் ஆயின் முயற்சியுடைய அன்னவன் அன்புடன் அளித்ததை உண்பேன் யான்"

"கடுமையான தவம்" என்பதற்குப் பதில் "எளிமையாக உள்ளன்போடு கூடிய பக்தி" என்றது கீதை. இந்த மார்க்கம் எல்லோரும் பின்பற்றத்தக்கதாக இருந்தது மேலும்.

"அது 'புத்தம் சரணம் கச்சாமி'யிலிருந்து வெறும் "சரணம் கச்சாமியை" மட்டும் எடுத்துக் கொண்டு புத்தன் இருந்த இடத்தில் கிருஷ்ணனை வைத்தது. கீதையில் கூறப்பட்டிருக்கும் ஒரு கட்டளை என்னிடம் சரணடைவாய் 'எல்லா கடவுள்களையும் கைவிட்டு என்னிடம் சரணடைவாய்' 'என்னுடைய பக்தர்களுக்கு அழிவில்லை'. 'இந்த பிரபஞ்சம் முழுவதும் பேருலகம் முழுவதும் நான்தான். நானே அனைத்தும். நானே எல்லாம்"

இப்படி சரணாகதி தத்துவத்தை மீண்டும் மீண்டும் உபதேசித்த கீதை– வர்ணாஸ்ரம தர்மத்தை வலியுறுத்தி கூறிய கீதை, அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் என்ன?

## அடிமைத் தத்துவம்

"ஒவ்வொரு ஆட்சி முறைக்கும் தனது குடிமக்கள் மீது தனது அதிகாரத்தையும் ஆட்சியையும் செலுத்துவதற்கு ஒரு சித்தாந்த ஆன்மிக அடிப்படை அவசிய மாகிறது. அரசியல் அதிகாரத்திற்கும் அதை நிலைநாட்டுவதற்கும் இறுதியாக அமைந்திருப்பது நிர்ப்பந்த பலம். ஆனால் அது மட்டும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்குப் போதாது. மக்கள் ஒரு சர்க்காரை தங்கள் இஷ்டபூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அது சாதாரணமாகச் சரியாக தான் செயல்படும். அதற்கு அரசிற்கு விசுவாசமாக இருப்பதற்கு பொதுவாக ஒப்புக் கொள்ளப்படும் கருத்துருவாக்கங்கள் தேவைப்படுகின்றன"

"கீதையில் கூறப்பட்டிருக்கும் பக்தி, அதாவது கடவுளின் பால் இருக்க வேண்டிய பக்தி. இந்திய நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் கடவுள் அம்சத்தைக் கொண்டிருக்கும் அரசனிடமும் பிரபுக்களிடமும் பண்ணையாட்கள் செலுத்த வேண்டிய கடமை உணர்வைப் பலப்படுத்தியது என்பதில் இம்மியளவும் சந்தேகம் இல்லை. இது குப்த அரசர்களைப் பலப்படுத்தியதில் ஆச்சரியமே இல்லை. அவர்கள் தங்கள் ஆட்சியின் மீதும் குடிமக்களுக்கு உள்ள விசுவாசத்தை பலப்படுத்துவதற்காக புராணங்களைத் திருத்தி மறுபதிப்பு செய்து வெளியிட்டார்கள்"

"இவ்வாறாக கடவுளின் பால் செலுத்த வேண்டிய பக்தி அரசன் பால் செலுத்த வேண்டிய பக்தியை பலப்படுத்தியது. அரசன் பால் செலுத்தப்படும் பக்தி கடவுள்பால் செலுத்தப்படும் பக்தியை பலப்படுத்தியது. இவையிரண்டும் சேர்ந்து உழைக்கும் மக்கள் மீது சொத்துடைமை வர்க்கங்கள், ஆளும் வர்க்கங்கள் தாங்கள் இவ்வுலக ஆதிக்கத்தையும் ஆன்மீக ஆதிக்கத்தையும் பலப்படுத்திக் கொள்வதற்கு உதவி கரமாக இருந்தது. எவ்வளவு சிறப்பான மகிழ்ச்சிகரமான தீர்வு பார்த்தீர்களா?"

ஆக, பகவத் கீதை மக்களை அடக்கி ஒடுக்க சுரண்டும் வர்க்கத்திற்கு மிகப் பெரும் தத்துவ ஆயுதமாகவே பயன்பட்டது. 'கடமையைச்செய்' என மீண்டும் மீண்டும் வலியுறுத்திய கீதை 'அதன் விளைவில் பற்று வைக்காதே' என கூறத் தவறவே இல்லை. இது பற்றி சற்று பரிசீலிப்பது அவசியம் அல்லவா?

"கடமையைச்செய், பலனை எதிர்பார்க்காதே" என்று கீதை போதிப்பதாக கூறினால் கீதை அப்படி கூறவில்லை. என்று வாதிடுவோர் உண்டு.

முதலில் மகாகவி பாரதியார் கூறுவதைக் கவனிப்போம்.

## பற்று நீக்கி.... பற்று நீக்கி....

"கண்ணபிரான் கீதையில் முக்கியமாக மூன்றாவது அத்தியாயத்திலும் பொதுப் படையாக எல்லா அத்தியாயங்களிலும் திரும்பத் திரும்ப தொழில் செய், தொழில் செய்! தொழில் செய்! தொழிலை விடாதே தொழில், செய் என்று போதிக்கிறார்"

" இங்கு தொழில் செய்யத் தூண்டியிருப்பது முக்கியமன்று; அதனை என்ன நிலையிலிருந்து என்ன மாதிரியாகச் செய்ய வேண்டும் என்று பகவான் காட்டி இருப்பதே மிக முக்கியம்"

"பற்று நீக்கித் தொழில் செய்; பற்று நீக்கித் தொழில் செய்; பற்று நீக்கி;—பற்று நீக்கி—இதுதான் முக்கியமான பாடம். தொழில் நீ செய்து தீர வேண்டியதாயிற்றே? நீ விரும்பினாலும் விரும்பாவிடினும் இயற்கை உன்னை வற்புறுத்தி தொழிலில் மூட்டுவதாயிற்றே? அதை மீட்டு மீட்டும் சொல்வது கீதையின் முக்கிய நோக்கம் அன்று. தொழிலின் வலைகளில் மாட்டிக் கொள்ளாதே. அவற்றால் இடர்படாதே. அவற்றால் பந்தப்படாதே, தளைப்படாதே—இதுதான் முக்கியமான உபதேசம். எல்லாவிதமான பற்றுகளையும் களைந்து விட்டு மனச்சோர்வுக்கும், கவலைக்கும், கலக்கத்துக்கும் பயத்துக்கும் இவை அனைத்திலும் கொடியதாகிய ஐயத்துக்கும் இடங்கொடாதிரு.

**"ஸம் சயாத்மா விநச்யதி**
**—ஐயமுற்றோன் அழிவான்"**

பகவத் கீதை மீது காதல் கொண்ட பாரதி எழுதியதுதான் மேலே உள்ளவை.

. பலனைப் பற்றி கவலைப்படாமல் – விளைவைப்.பற்றி கவலைப்படாமல்– பயங்கொள்ளாமல்–சந்தேகப்படாமல்–தொழில் செய்ய வேண்டுமாம், என்ன தொழில், குலத்தொழில்தான்–அதைத்தான் ஏற்கெனவே விளக்கி உள்ளோமே?.

கீதை 3வது அத்தியாத்தில் பற்று நீக்கித் தொழில் செய்ய உபதேசித்த கிருஷ்ண பரமாத்மா 18வது அத்தியாயத்தில் மற்ற மூன்று வருணத்தாருக்கும் தொண்டுழியம் செய்வதே சூத்திரர் கடமை என்று நிர்ணயித்து கட்டளையிடுகிறார். அதற்கும் மேல் பிறிதோர் இடத்தில் (அத்தியாயம் 3. சுலோகம் 15லும் 16ஆம் அத்தியாயம் 23வது சுலோகத்திலும்) தம் குலக்கடமையை மீறுகிறவர் பரகதி அடையமாட்டார். மோட்சம் கிடையாது. குலத்தொழில் செய்யாமல் இருப்பதைவிட செத்துப் போவதே மேல். தோட்டி, தோட்டி வேலை செய்தால்தான் மோட்சம். இல்லாவிடில் செத்துப்போக வேண்டும். பற்று நீக்கித் தொழில் செய்யச் சொன்னவன் வர்ணாஸ்ரம தர்மத்தை மட்டும் கறாராக பற்றி நிற்கச் சொன்னான். அங்கேதான் கீதை பிராமணிய ஆதிக்கத்துக்கு நன்கு கருத்து அடித்தளம் அமைக்கிறது.

## கீதையும் ஆத்மாவும்

மீண்டும் மீண்டும் இதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தால் பகவத் கீதை வேறு எதைப் பற்றியும் பேசவில்லையா? குறிப்பாக ஆன்மீகம் பற்றி கேள்வி எழும். முழுவதுமாக கீதையின் ஆன்மீக குழப்பங்களை எழுத பல நூல்கள் வேண்டும் .நாம் சிலவற்றைமட்டும் மாதிரிக்குப் பார்ப்போம்.

கி. வீரமணி தமது நூலில் 'கீதையும் ஆத்மாவும்' என்கிற அத்தியாயத்தில் ஆத்மா குறித்து எப்படி எல்லாம் குழப்புகிறது என்று நிறுவுகிறார். ஆத்மா அழிவற்றது என்றால் மறுபிறப்பு பற்றியும் கீதையிலேயே கூறப்பட்டது ஏன்? இம்முரண்பாடுகளை விளக்குகிறார் ஜோசப் இடமருகும். ஏறத்தாழ கி.வீரமணி கருத்தோடு ஒத்துப்போகிறார். நீங்களும் பாருங்கள்.

**'ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்**
**நாயம் பூத்வா பவிதா வா நபூய**
**அஜோ நித்ய: சாச்வதோ யம் புராணோ**
**ந ஹண்யதே ஹண்யமானே சரீரே'**

**(கீதை 2.20)**

'ஆத்மா' எப்போதும் பிறப்பதுமில்லை. எக்காலத்திலும் இறப்புதுமில்லை. ஒரு சமயம் இருந்து மறுசமயம் இல்லை என்பதுமில்லை. இது பிறப்பற்றது,

என்றுமுள்ளது: நிலையானது: பழமையானது; சரீரம் கொல்லப்படும்போதும் இது கொல்லப்படுவதில்லை.'

**'அச்சேத்யோ பமதாஹ்யோய**

**-மக்லேத் யோ**

**-சோஷ்ய ஏவ ச**

**நித்ய: ஸர்வகத: ஸதர்ணு ரசலோயம் ஸ்நாதன''**

"இது வெட்ட முடியாதது, எரிக்க முடியாதது, நனைக்க முடியாதது, உலர்த்த முடியாதது, நிலையாக உள்ளது, எங்கும் பரவியது, அசைவற்றது இன்றும் என்றும் புதியது"

இப்படிப்பட்டது ஆத்மா என்று கூறியவன்.

**ஜதாஸ்ய ஹி த்ருவோ மருத்யுர் -தருவம் ஜன்ம-மருதஸ்வச**

**தஸ்மா-தபரிஹார்யேசர்ந்தேந த்வம் சோசிது- மர்ஹஸி''**

"பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம் உண்டு. மரணமடைந்தவன் பிறப்பது நிச்சயம். ஆகவே தவிர்க்க முடியும் ஒரு விஷயத்தைக் குறித்து நீ கவலைப்படாதே"

சாவு உண்டென்றால் ஆத்மா என்ன ஆகும்? எங்கு போகும்?

**''ஹஸாம்ஸி ஜிர்ஹானி யதா விஹாய**

**நவானி க்ருஹணாதி நரோ பராணி**

**ததா சரீராணி விஹாய ஜீர்ண்ணா**

**நன்யானி ஸம்யாதி நவானி தேஹிம்''**

**(கீதை 2.22)**

"நைந்த துணிகளை கழற்றியெறிந்து விட்டு மனிதன் புதிய துணிகளைக் கொள்ளுமாறு போல் ஆத்மா நைந்த உடல்களைக் களைந்து புதியனவற்றை எய்துகிறது"

## ஐயமுற்றோன் அழிவான்

ஒருவன் பழைய சட்டையை மாற்றி விட்டு புதிய சட்டை போட்ட பின்னும் அவனாகவேதான் இருப்பான். இன்னொருவனாக மாறான். இது நடப்பில் உள்ள உண்மை வாழ்க்கை. ஆத்மா வேறு உடலைச் சார்ந்தபின் அவன் யாராக இருப்பான்? யோசித்தால் மண்டை பிய்ந்து விடும்? ஆத்மா சாகாதது என்றால் குலத்தொழிலை

கர்ம பக்தியுடன் செய்து ஒழுகி–பக்தி செலுத்தி மோட்சம் பெறுவது ஏன்? பரமாத் மாவுடன் இந்த ஆத்மா கலக்குமாம், அது எப்படி? இப்படி பகுத்தறிவு பூர்வமாக கேள்விகள் எழுப்பினால் 'ஸம்சயாத்மா விநச்யதி' "ஐயமுற்றோன் அழிவான்" என கீதை சபிக்கும்; அதற்கு அப்புறமும் கேள்வி கேட்டால்,

**"ஆச்சர்யவத் பச்யதி கச்சிதேனம்**
**ஆச்சர்யவத் வததி த்தைவ சான்ய:**
**ஆச்சர்ய வச் சைன-மான்ய: ச்ருனோதி**
**ச்ருத்வாப்யேனம் வேத ந சைவ கச்சித்"**

**(கீதை 2.29)**

**"வியப்பென ஒருவன் காண்கிறான்,**
**வியப்பென ஒருவன் சொல்கிறான்,**
**வியப்பென ஒருவன் கேட்கிறான்,**
**கேட்கினும், இதனை அறிவான்**
**எவனுமில்லை"**

"ஆச்சரிய வஸ்துவை பார்ப்பது போல் ஒருவன் பார்க்கிறான். ஒருவன் கேட்கிறான், ஒருவன் பேசுகிறான், ஆனால் எவனும் ஆத்மாவை அறிந்தவன் அல்ல" என்கிறது கீதை.

கி. வீரமணி சரியாக கேட்கிறார்;

"எவனும் அறியாதது ஆத்மா என்றால் அதை எப்படி அறிவாளிகள் ஏற்க முடியும்?"

இப்படி 'கிடுக்கிப் பிடி' போட்டால் இந்துத்துவவாதிகள் கோபப்படாமல் இருப்பார்களா?

## ஸ்திதப் பிரக்ஞன்

ஆயிரம் இருக்கட்டும்; பகவத் கீதை சுட்டிக்காட்டும் "ஸ்திதப் பிரக்ஞன்" என்பது ஆன்மீக விடுதலை மார்க்கமாக–மன நிம்மதியும் மகிழ்ச்சியும் தரும் உபதேசமாக கருதப்படுகிறது. பேசப்படுகிறது. கீதா உபதேசம் என்கிற பெயரில் கடைக்கு கடை தொங்க விடப்படும் துண்டு பிரசுரங்களும் கீதையைத் தழுவி சில சூப்பர் ஸ்டார் நடிகர்கள் பேசுகிற பேச்சுகளும் ஒரு பற்றற்ற முன்மாதிரி வாழ்க்கை வாழ வழிகாட்டு வதாக கூறுபவர்கள் இருக்கிறார்கள். பதட்டமும், பொறாமையும், கோபதாபங் களும், அகங்காரமும், இறுமாப்பும், எதிர்ப்பார்ப்பும், ஏமாற்றங்களும், பேராசையும்,

மிகுந்த உலகில் தனிமனித மகிழ்ச்சி என்பது குறித்து அதிகக் கவலை தோன்றியுள் ளது. இது குறித்து பேசுவதும் எழுதுவதும் போதிப்பதும் ஒரு நல்ல வருவாய் ஈட்டும் தொழிலாக மாறி வருகிறது. அந்த 'குரு பிஸினெஸ்' செய்பவர்கள் கீதையின் 'ஸ்திரப் பிரக்ஞன்' குறித்து அதிகம் பேசுவதும் நவீன நிர்வாகம் உட்பட அனைத்திற்கும் அதைப்பொருத்திக் காட்டுவதும் நடக்கிறது. எஸ்.ஜி. சர்தேசாயும் திலிப்போசும் "மார்க்சியமும் பகவத் கீதையும்" என்கிற நூலில் கூறுவதை சற்று பார்ப்போம்;

"பகுத்தறிவு எண்ணங்கள் நிறைந்த பலரும்கூட, கீதையின் செப்படி வித்தைகளை ஏற்பவர்கள் கூட, ஸ்திரப் பிரக்ஞன் என குணாம்சப்படுத்தியுள்ள கருத்தில் பெரிய அளவு ஈடுபாடு கொண்டுள்ளனர். (பகவத் கீதை அத்தியாயம் 2ல் 54 முதல் 74 வரை உள்ள சுலோகங்கள் ஸ்திதப் பிரக்ஞன் பற்றி விரிவாகக் கூறுகிறது) அந்த 'ஸ்திரப்பிரக்ஞன்' என்பதில் ஒவ்வொரு மனிதனும் உன்னதமான நிலைமையை அடைவதற்கான லட்சியப் பிடிப்பு ஏற்படுவதற்கான படிப்பினைகள் இருப்பதைக் காண்கிறான்"

## லட்சிய படைப்பா?

"கீதையில் வரும் 'ஸ்திரதப் பிரக்ஞன்' சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு சிறந்த பாத்திரமாக ஒரு லட்சியப் பாத்திரமாக அமைகிறான். அத்தகைய மனிதனைப் பற்றி கீதை விவரிக்கும்போது ஒரு வீரன்–துணிவான மனிதன், மக்களுடைய லட்சியங்களுக்காக, நன்மைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு லட்சிய மனிதன் எத்தகைய குணச்சிறப்புகளை எல்லாம் கொண்டிருக்க வேண்டும் என்பதை விரிவாக எடுத்துக் கூறுகிறது. "அவன் பயமில்லாதவன், துணிவானவன், எந்தச் சூழ்நிலையிலும் கலக்கமடையாதவன், சுயகட்டுப்பாடு உடையவன், உறுதி குலையாதவன், எந்த வகையிலும் சுயநலமில்லாதவன், சமுதாயத்தின் பால் தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் உணர்வு பூர்வமாக உள்ளவன், கடமை தவறாதவன் இத்யாதி... இத்யாதி..."

'ஸ்திரம் பிரக்ஞனைப் பற்றி கீதையில் வரும் ஒவ்வொரு விளக்கமும் அவனை தன்னைத்தானே மையமாகக்கொண்டவன். தன்னைத்தானே போற்றும் சுயபோற்றுதலுக்குரியவனாகவே மனிதனை சித்தரித்துக் காட்டுகிறது. அவனு டைய மன அமைதி, பற்றின்மை, எல்லா பாசங்களிலும் இருந்தும் தன்னை விடுவித்துக் கொள்வது (அனாசக்தி)ஆகியவை எல்லாம் தான் மக்களுடன் கலந்து நிற்பது என்பதாக அன்றி தன்னை மிக மேலான பிரம்மத்துடன் இணைத்துக் கொள்வதன் மூலமாகத்தான் எடுத்துக்காட்டப்படுகிறது. உபநிடதங்களையும்

கீதையையும் நன்கு அறிந்தவர்கள் ஸ்திரப் பிரக்ஞன் என்பவரின் உபநிடதங்களில் கூறப்பட்டிருக்கும் பிரம்மத்தை அடைந்தவன்தான் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அகம் பிரம்மாம் சம் (நானே பிரம்மம்) எனும் கருத்தும் ஸ்திரப் பிரக்ஞன் என்னும் கருத்து வடிவமும் ஒன்று போல் அமைந்திருக்கிறது"

"பார்த்தா, ஒருவன் தன் மனதில் எழும் விருப்பங்கள் அனைத்தையும் துறந்து தன்னிலேதான் மகிழ்ச்சி பெறுவானாயின் அப்போது ஸ்திர புத்தியுடையோன்– ஸ்திதப் பிரக்ஞன் என்று கூறப்படுவான்"(கீதை 2.55) "ஆமை தன் அவயங்களை இழுத்துக் கொள்வது போல், எப்புறத்தும் விஷய யதார்த்தங்களினின்று புலன்களை ஒருவன் மீட்க வல்லான் ஆயின் அவனறிவே நிலை கொண்டது."

**(கீதை 2.58)**

இவ்வாறாக கீதை ஸ்திரப் பிரக்ஞனைப் பற்றி விவாதித்துக் கொண்டே போகிறது. இவையெல்லாம் போதாமல் பிரபலமான கீழ்கண்ட சுலோகங்கள் எடுத்துக் காட்டுகின்றன; "இதர உயிர்களுக்கு எது இரவாக இருக்கிறதோ அது அவனுக்கு விழிப்பு நிலையாகவும், எது இதர உயிர்களுக்கு விழிப்பாக இருக்கிறதோ அது அவனுக்கு இரவாகவும் இருக்கிறது"

## ஆன்மிக தன்னகங்காரம்

எனவே உங்களுக்கும் எனக்கும் எது ஒளியோ அது ஸ்திதப் பிரக்ஞனுக்கு இருளாகவும், நமக்கு எது இருளாக உள்ளதோ அது அவனுக்கு ஒளியாகவும் உள்ளது. இதில் பின்னிப் பிணைந்துள்ள விஷயங்கள் தெளிவானவை. மக்கள் மடமையிலும், சிற்றின்பங்களிலும், வன்முறையிலும், இன்னும் பல பலவீனங்களிலும் மூழ்கி இருக்கிறார்கள். ஆனால் ஒளி பெற்றவன் இந்த மனித பலவீனங்கள் அனைத்திலிருந்தும் விலகி வேறுபட்டு நிற்கிறான்.

இது ஆன்மீக தன்னகங்காரம் அல்லாமல் வேறு என்ன? ஸ்திதப் பிரக்ஞன் தனது உள்ளத்தில் மக்களைக் கீழாகக் கருதுகிறான், அவனுக்கு மக்கள் மீது ஆன்மீக வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது.

இப்படி நாம் கூறும்போது சிலர் குதர்க்கம் பேசக்கூடும். மக்களோடு வாழ்வது என்றால் அவர்களைப்போல் குடித்து அழிந்து போவதா? அல்லது காமகளியாட்டங்களில் சீரழிவதா? சின்னஞ்சிறு கதைகள் பேசித் திரிவதா?

இதை நாமும் ஆதரிக்க முடியாது. ஆதரிக்கவும் இல்லை. ஆனால் எல்லாவற்றையும் விட்டு விலகி ஆமை ஓட்டிற்குள் சுருங்குவது மாதிரி சுருங்கி சுருண்டுதான், தன் ஆத்மா சுகம் என்று மட்டும் மாறுவது முழுமையான அப்பட்ட

மான சுயநலம்தானே. அடுத்து அது சாத்தியமா? உண்பது முதல் உடுப்பது வரை–விழித்தது முதல் உறக்கம் வரை–பிறந்தது முதல் இறப்பது வரை இவ்வுலகில் பிறர் தயவும், உழைப்பும், ஆதரவும் இன்றி எது கிடைக்கும்? எப்படி வாழ முடியும்? அதையெல்லாம் அனுபவித்து விட்டு நீ உன்பாட்டுக்கு உன் ஆன்மா விடுதலை பற்றி மட்டும் கவலைப்படு, மக்களைப் பற்றி கவலைப்படாதே என்றால் என்ன பொருள்? கொடுமையை எதிர்த்து நிற்க வேண்டாமா? சந்தேகம் கொள்ளாமல், கேள்வி கேட்காமல் இது சாத்தியமா? இவற்றை கீதை தடை செய்து விட்டதே.

அதன் விளைவுதான், கீதையின் சாரமாக பிரசுரிக்கப்படும் கீழ்கண்ட வாசகங்கள்:

## கீதா சாரம்

**எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது**

**எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது**

**எது நடக்க இருக்கிறதோ**

**அதுவும் நன்றாகவே நடக்கும்**

**உன்னுடையதை எதை இழந்தாய்**

**எதற்காக நீ அழுகிறாய்?**

**எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?**

**எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?**

**எதை நீ எடுத்துக் கொண்டாயோ,**

**அது இங்கிருந்தே எடுக்கப்பட்து.**

**எதை கொடுத்தாயோ**

**அது இங்கேயே கொடுக்கப்பட்டது**

**எது இன்று உன்னுடையதோ**

**அது நாளை மற்றொருவருடையதாகிறது**

**மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்**

**"இதுவே உலக நியதியும்**

**எனது படைப்பின் சாராம்சமாகும்"**

இப்படி கூட்டுப் புழுவாய் எல்லாம் அவன் செயல்–நடப்பெதல்லாம் நாராயணன் செயல் என்று முடங்குவதும் ஒடுங்குவதும் யாருக்கு லாபம்? சுரண்டல் கூட்டத்திற்கு

அன்றோ? கீதை சுரண்டும் கூட்டத்தை ரட்சிக்கவே நம்மை முடங்கச் செய்கிறது– ஒடுங்கச் செய்கிறது–உறங்கச் செய்கிறது–இல்லாத மோட்ச உலகிற்கு பாதை காட்டி மயங்கி விழச் செய்கிறது."என்னை சரணாகதி அடை" என கிருஷ்ணன் மூலம் அழைப்பு விடுத்து, சமூக எழுச்சியை முடக்கி, தனிநபரை விழச் செய்கிறது. இதுபற்றி உரக்க பேசவேண்டிய நேரம் வந்து விட்டது.

மேலும் அறிவியல், அரசியல் கோணங்களிலும் அலச வேண்டியுள்ளது.

# V - அறிவியல் -அரசியல் உலகில் கீதை

"பெண் அடிமைத்தனம்" பற்றி ஜோசப் இடமருகு தமது நூலில் தனி அத்தியாயத்தில் ஆய்வு செய்துள்ளார். ஆனால் கி.வீரமணி நூலில் அப்படி ஒரு பகுதி இடம்பெறவில்லை. ஏனைய அத்தியாயங்களில் அவை அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம் பெற்றிருக்கிறது. அவ்வளவே!

## பெண் அடிமைத்தனம்

பெண்கள் பற்றிய பார்வை பகவத் கீதையில் எப்படி இருக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அதே சமயம் மூன்று கேள்விகளுக்கு விடை கண்டாக வேண்டும்.

ஒன்று, பெண்ணடிமைத்தனம் இந்தியாவில் ஆதி காலந்தொட்டு ஒரே மாதிரியாகவா இருந்து வந்துள்ளது?

இரண்டு, பெண்ணடிமைத்தனத்தை கீதை மட்டுமே வலியுறுத்தியதா?

மூன்று, கலப்பு திருமணத்தை எதிர்த்து ஏன் கீதை எழுத வேண்டி வந்தது.

"இந்தியாவில் வேதகால கட்டத்தில் கூட சமூகத்தில் பெண்களுக்கு ஆணுக்கு சமமான இடம் இருந்து வந்தது. ரிக்வேத மந்திரங்களை எழுதியவர் சில பெண் களே. ஆனால் நால்வருண முறை வலிமை பெறத் தொடங்கியதும் பெண்களின் நிலை வீழ்ச்சி அடைந்தது"

இப்படிக் கூறும் இடமருகு அதனை நிறுவிக் காட்ட பல உதாரணங்களை தந்துள்ளார்.

### பாபயோனி....

"வேதங்களைப் படிக்கின்ற பெண்களைப் பற்றி பாணினி குறிப்பிட்டுள்ளார். 'உபாத்யாயி' என்ற பெயரில் அழைக்கப்பட்ட ஆசிரியைப் பற்றி காத்யாயணரும் குறிப்பிட்டுள்ளார். படிப்பதற்காகவே திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்த

பிரம்மவதினிகளைப்பற்றி புத்த–சமண இலக்கியங்களில் காணலாம். கவுசாம்பியை ஆண்ட மன்னரின் மகளான ஜெயந்தி மணம் புரியாமலே மதத்திற்காகவும் தத்துவத்திற்காகவும் வாழ்ந்ததாக சமணர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவர் மகாவீரருடன் வாதத்தில் ஈடுபட்டாராம்...." இப்படி இடமருகு தரும் உதாரணங்கள் மட்டுமா? தமிழில் பெண் பால் கவிஞர்களை 'ஔவையார்' என்று அழைத்ததும் 18 பெண் பாற் புலவர்கள்–ஔவையார்கள் இருந்ததும் கவனத்திற்கொள்ள வேண்டிய செய்தி. தாய்வழி சமூகம் கேரளாவில் 'மருமக்கள் வழி' என்கிற வகையில் இருந்ததும் கண்கூடு. வரலாற்றில் முதல் அடக்குமுறை பெண் அடிமைத்தன மாகவே இருக்கக் கூடும் என்று கூறும் மார்க்சிய ஆய்வாளர்கள் கூற்றும் இங்கும் பொருந்தும். பெண்ணடிமைத்தனம் குரூரமாக இங்கே அமலானது, கல்வி, கேள்விகளில் உரிமை அற்றவராய் பெண்கள் ஒடுக்கப்பட்டனர். பாவயோனியில் பிறந்தவர்கள் என்று மனுவும் குறிப்பிட்டது. சூத்திரர்கள், சண்டாளர்கள், பெண்கள், நாய்கள் என சகலத்தையும் சமப்படுத்தி மனு இழிவு செய்தது. கீதையிலும் அதைக் காணலாம். பகவத் கீதையில் 9வது அத்தியாயம் 32வது சுலோகம் "பார்த்தா! பெண்களோ, வைசியர்களோ நீச குலத்தில் பிறந்தவர்களோ எவரானாலும் என்னைப் பணிவாராயின் பரகதி பெறுவர்" என்று பாபயோயை.... அதாவது பாபயோனியில் பிறந்தவர் பட்டியலில் பெண்களையும் கீதை சேர்த்தது.

அதே சமயம் இந்த பெண்ணடிமைத்தன விஷயத்தில் கீதை மட்டுமல்ல, எல்லா நூல்களும் அதே அளவுகோலையே கொண்டிருந்தன. போற்றுதலுக்குரிய திருக்குறளில்கூட "பெண் வழிச் சேராமை" உண்டு, 'கற்பை' பெண்ணுக்கு மட்டுமே குறளும் வலியுறுத்தியது. 18வது நூற்றாண்டில் பெண் விடுதலைச் சிந்தனை முளை விடும் வரை இதே நிலைதான். ஆக கீதையும் பிற இலக்கியங்களைப்போல தாம் வாழ்ந்த காலத்தையே பிரதிபலித்து வந்துள்ளது.

## கலப்பு மணமறுப்பு

அதேபோல கலப்பு மணம் ஒரு கால கட்டத்தில் பாவமாக கருதப்படவில்லை என்றே இடமருகு வாதிடுகிறார். கி. வீரமணியும் அதையே மேற்கோள் காட்டியுள்ளார். பரசராசன் என்ற பிராமண மகரிசிக்கும் காளி என்ற மீனவப் பெண்ணுக்கும் பிறந்தவரே, வேத வியாசர் என்பதை புராணம் கூறுகிறது. அது உண்மையா பொய்யா என்பது வேறு விஷயம். ஆனால் கலப்பு மணம் அக்கால கட்டத்தில் பாவமாக கருதப்படவில்லை. "ஏகாதச சங்க, வர்ணம்" என்கிற பெயரில் பல கலப்பு சாதிகள் பற்றிய விபரங்கள் உள்ளன. கிருஷ்ணனைப் பற்றிய கதையிலேயே அவருக்கு 16008 மனைவியர் உண்டு; நம்பக் கூடியதல்ல. அதிலும் எட்டு மனைவியரில் ஒருவரான ஜாம்பாவதி மலையரசரின் மகள். இப்படிப்பட்ட

கதைகள் வர்ணக் கலப்பை காட்டி நிற்கின்றன.

அதே சமயம் கீதையில் அர்ஜுனன் புலம்புகிறான்: "கண்ணா, அதர்மம் சூழ்வதனால் குல ஸ்திரிகள்கெட்டுப் போகின்றனர். விருஷ்ணி குலத்தோன்றலே, மாதர்கள் கெடுவதனால் வர்ணக் குழப்பம் உண்டாகிறது. அக்குழப்பத்தால் குலத்தார்க்கும் அதனை அழித்தார்க்கும் நரகமேற்படுகிறது. அவர்களுடைய பிதிர்கள் பிண்டமும் நீருமின்றி வீழ்ச்சி பெறுகிறார்கள்". இப்படி அத்தியாயம் 1. சுலோகம் 41-44களில் அர்ஜுனன் புலம்ப கீதாசிரியன் வர்ணா தர்மத்தை நிலை நிறுத்த போதனை செய்கிறான். வர்ண தர்மத்தை பாதுகாக்க, பிராமண ஆதிக்கத்தை நிலைநாட்டவே கலப்பு மண மறுப்பு காலகதியில் கடமையாக்கப்பட்டது என அறியலாம்.

## அறிவியலும் கீதையும்

அடுத்து பகவத் கீதையில் கூறப்படும் பல கருத்துக்கள் எப்படி அறிவியல் உண்மைக்கு பொருந்தி வரவில்லை என்பது, கி.வீரமணி, இடமருகு இருவர் நூலிலும் இதற்கென தனித்தனி அத்தியாயங்கள் உள்ளன. ஏறத்தாழ ஒரே தொனியில் பேசுகின்றன. அதே சமயம் இடமருகு இது குறித்து சற்று சிறப்பாகவே தமது அத்தியாயத்தில் விவரித்துள்ளார். அதிலிருந்து சில உதாரணங்கள்.

தண்ணீர் $H_2O$என்பது ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனும் சேர்ந்து உண்டாவது, தண்ணீருக்கு சுவை கிடையாது. ஆனால் கீதையில் 'ரஸோ ஹமப்ஸு' (கீதை 7.8) என்கிறார். அதாவது தண்ணீரின் சுவையும் நானே. இது அறிவியல் பூர்வமாக தவறல்லவா?

"ப்ரபாஸ்மி சசி ஸுர்ய்யயோ" (கீதை 7.8) சந்திர – சூரியனின் ஒளி நான் என்கிறார். சந்திரனுக்கு ஒளி எது? அன்றைய அறிவியல் வளர்ச்சியில் அவருக்கு இது தெரியாமல் போயிருக்கலாம்.

**"அவ்யக் தா தீனி பூதானி வயக் தமத்யானி பாரத'**
**அவ்யக்த நிதனான்யேவ தத்ரகா பரிதேவனா**

**(கீதை 2.28)**

"பாரதா! உயிர்களின் ஆரம்பம் தெளிவில்லை; நடுநிலைமை தெளிவுடையது; இவற்றின் இறுதியும் தெளிவில்லை. இதில் துயரப்படுவதென்ன?

இப்படி பல தெளிவற்ற அம்சங்கள் உண்டு.

**"அன்னால் பவந்தி பூதானி பர்ஜ்ஜன் யாதன்ன ஸம்பவ**

**யஜ்ஞால் பவந்தி பர்ஜ்ஜன் யோயஜ்ஞ:**

**கர்மஸமுத்பவ:**

**கர்மப்ரஹ் மோத் பவம் விதித்ப்ரஹ**

**சஷர,முத் பவம்**

**தஸ்மால் ஸர்வகதம் ப்ரஹம**

**நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ் டிநம்''**

**(கீதை 3.14,5)**

"அன்னத்திலிருந்து உயிர்களும், மழையிலிருந்து அன்னமும், யாகத்திலிருந்து மழையும், கர்மத்திலிருந்து யாகமும், வேதத்திலிருந்து கர்மமும், பரமாத்மாவிலிருந்து வேதமும் உண்டாகின்றன. அதனால் எங்கும் நிறைந்த பரமாத்மா எப்பொழுதும் யாகத்தில் நிலைபெற்றது"

இவையெல்லாம் அறிவியல்பூர்வமான பரிணாம தத்துவத்திற்கு சற்றும் நெருங்காதவை என்பதை உணர சாதாரண பகுத்தறிவு போதுமே; காற்று மண்டலம் குறித்தும் நட்சத்திரங்கள் குறித்து கீதை கூறி இருப்பதும் இது போன்றதே.

இடமருகு கூறுவது போல்:

"ஆழ்ந்து ஆராய்ந்தால் இதுபோன்ற அறிவியலுக்கு ஒவ்வாத பலவற்றையும் கீதையிலிருந்து எடுத்துக் காட்ட முடியும். இடத்தின் விரிவு அயஞ்சி நான் அதற்கு முன்வரவில்லை. **மற்ற பழைய நூல்களைப் போலவே அந்த கால கட்டத்திலுள்ள அறிவுகளும் அறியாமைகளும் கீதையிலும் உள்ளன**"

இது கீதையின் குற்றம் என்று கூறுவதைவிட அவர் வாழ்ந்த காலத்து அறிவியல் வளர்ச்சியும் அறிவியல் பற்றி கவிஞருக்கு இருந்த ஞானக் குறைவுமே நூலில் பிரதிபலித்திருக்கும். இது இயல்பு. ஆனால் இன்று அறிவியல் உண்மைகள் கீதையில் இருப்பதாகக் கூறி இந்துத்துவா வாதிகள் மோசடி பிரச்சாரம் செய்வத னால் சில உண்மைகளை கூறி அவர்களை மறுக்க வேண்டியுள்ளது.

## அரசியல் ஆயுதம்: கீதை

கீதையில் அறிவியலைத் தேடுவோர் ஒருபுறமிருக்க அதை அரசியல் ஆயுதமாக சுதந்திரப் போராட்டத்தின் போதும் முயன்றனர், தற்போதும் முயல்கின்றனர். அதே சமயம் எல்லோரும் ஒரே நோக்கத்தோடு அணுகியதாக கூறமுடியாது. கூறவும் கூடாது. இதுபற்றிய புரிதல் அவசியம் ஆகிறது. கி. வீரமணியும், ஜோசப்

இடமருகுவும் இதுபற்றி போகிற போக்கில் சிலவற்றை கூறியிருக்கிறார்கள். எஸ்.வி. சர்தேசாயும், திலிப்போசும் எழுதிய 'மார்க்சிசமும் பகவத் கீதையும்' என்ற நூலில்தான் ஓரளவு அதன் நுட்பங்கள் அலசப்பட்டுள்ளது. அவர்கள் சொன்னது:

"... வங்க மொழி நாவலாசிரியர் பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயா என்பவர்தான் முதன் முதலில் நவீன காலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கீதையை புது வகையில் விளக்கி வியாக்கியானம் செய்து அதிலிருந்து நேரடியாக அரசியல் உணர்வு வேகத்தைப் பெறுவதற்கு முயற்சித்த முதலாவது சிந்தனையாளராகத் தெரிகிறது. அவருக்கு அடுத்தபடியாக அரவிந்தர்–பாண்டிச்சேரி முனிவர் பின் தொடர்ந்தார். அரவிந்தர் முதலில் பயங்கரவாதியாக, பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார். அவர் 1908ம் ஆண்டில் மானிக் டோலா வெடிகுண்டு வழக்கில் சேர்க்கப்பட்டு தண்டிக்கப்பட்டவர். பால கங்காதர திலகர் நாடு கடத்தப் பட்டு மாண்டேலா சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது 1908 ஆண்டு முதல் சிறையில் இருந்துகொண்டே பென்சிலைக் கொண்டு 'கீதா ரகசியம்' என்ற நூலை எழுதினார். மகாத்மா காந்தி தனது ஆசிரமத்தில் இருந்தவர்களுக்கு கீதையைப் பற்றி உபதேசங்கள் செய்தார். அவர் தனக்கே உரிய விளக்கங்கள், வியாக்கியா னங்களை அந்த உரையின் மூலம் வெளிப்படுத்தினார். நமது தொடக்க கால விடுதலை இயக்கத் தலைவர்கள் குதிராம் போஸ் போன்றவர்கள் இந்த கீதையை கையில் வைத்துக் கொண்டுதான் தூக்கு மேடை ஏறினார்கள். தூக்குக் கயிற்றில் முத்தமிட்டு தங்கள் உயிரை அர்ப்பணித்தார்கள். எனவே நமது தேசிய இயக்கத்தின் மீது கீதைக்கு இருந்த செல்வாக்கை யாரும் மறுப்பதற்கு இல்லை."

"அதே சமயத்தில் பண்டைகால, மத்திய கால இந்து எழுத்துகள், நூல்கள் மதச்சின்னங்கள் போன்றவைகளில் இருந்து உணர்வும் வேகமும் பெறுவதற்கான முயற்சிகளில் சற்று அதிகமான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதன் காரணமாக சில குறிப்பிட்ட அளவில் இந்துக்கள் அல்லாத இதர மக்கள் தேசிய இயக்கத்திலிருந்து சற்று விலகிச் செல்லும் நிலை ஏற்பட்டது என்பதை நாம் குறிப்பிட வேண்டியதும் சுட்டிக் காட்ட வேண்டியதும் அவசியமாகிறது. இது குறிப்பாக பெரும்பாலும் முஸ்லீம் மக்களைப் பொறுத்தமட்டில் உண்மையாகும்."

**(மார்க்சியமும் பகவத் கீதையும் பக் 71,72)**

தொடர் விளைவும், ஏகாதிபத்திய சூழ்ச்சியும், இந்துத்துவாவும், இஸ்லாமிய அடிப்படைவாதமும், தேசிய விடுதலைப் போரில் பெரும் பாதிப்பை உருவாக்கியதும் இன்றும் அதன் கோர விளைவுகள் அரசியலில் இருப்பதும் நாம் காணும் உண்மை.

## சங்கரர் கூறும் மாயை

குதிராம் போஸ், ராம்பிரசாத், அஸ்பக்குல்லா போன்றோர் பகவத் கீதையை கையில் பிடித்து கொண்டே தூக்கு மேடை ஏறியது சின்ன செய்தி அல்ல.

ஆதி சங்கரர் கீதைக்கு எழுதிய பாஷ்யம் மாயையை மிகவும் வலியுறுத்தியது.

"சங்கரருடைய விளக்கம் வியாக்கியானம் (கிபி 788–820)தான் இன்றுள்ள வியாக்கியானங்களில் மிகவும் பழமையானது. அவருக்கு உண்மை நிலை அல்லது பிரம்மம் என்பது ஏகம் அது ஒன்றுதான்–அதற்கு இரண்டாவது எதுவும் இல்லை, வெளிப்பட்டுள்ள உலகம் முழுவதும் மிக உயர்ந்த அமானுஷ்ய சக்தியான கடவுளால் எடுத்துக் கூறப்படுபவை தவிர மற்றவை அனைத்தும் மாயை. அவையெல்லாம் அவித்தையால் உண்டாக்கப்பட்டவை. அதிலிருந்து நம்மை விடுவிப்பது ஞானத்தின் வேலை. ஞானத்தை முழுமையாக அடையும்போது அது கர்மத்தை நிலை மறுப்பதாக ஆகிவிடுகிறது. நமது மனத்தை சுத்தப்படுத்துவதற்கு ஒரு சாதனமாக கர்மம் கட்டாயம் அவசியம் என்றும், நாம் ஞானத்தை அடையும்போது கர்மம் மறைந்து விடுகிறது என்றும் சங்கரர் நிலை நிறுத்துகிறார். ஞான–கர்ம சமுக்கியத்தை அதாவது ஒன்றிணைப்பை அவர் நிராகரிக்கிறார்.

**(மார்க்சியமும் பகவத் கீதையும் பக்.75)**

## சம்பவாமி, யுகே! யுகே

சங்கரரின் இந்த விளக்கம் மக்களை செயலற்ற தன்மையில் தள்ளி விடுவதாகும். உதாரணமாக, "உன்னுடைய மனைவி யார்? யார் உன் மகள்? நீ எப்போது வந்தாய்? நீ எங்கே போகிறாய்? இவையெல்லாம வேடிக்கை விந்தையானது. இவைகளைப் பற்றிய பிரம்மைகளையெல்லாம் விட்டுவிட்டு அனந்தமான சக்திக்கு சரணாகதி அடைந்து விடு" என்றார். இவையெல்லாம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓட மனிதனை துரத்தும். எனவே பங்கிம் சந்திரர், திலகர், விவேகானந்தர், ஆகியோர் இதை மாற்றி கர்மயோகத்தை அதிகம் வலியுறுத்தினர். அதனை தேசவிடுதலைக்கு பயன்படுத்தினர். குறிப்பாக ஆத்மா அழியாதது என்பதை கீதை 2வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருப்பதையும்– 'ஸ்திதப் பிரக்ஞன்' பற்றிய விதவிதமான வியாக்கியானங்களும்–அக்கிரமக்காரர்களை அழித்து (துஷ்ட நிக்ரக் சிஷ்ட பரிபாலன க்ரக) தர்மத்தை நிலை நாட்டுவதற்கு ஒவ்வொரு யுகத் திலும் நான் அவதரிக்கிறேன் (சம்பவாமி, யுகே, யுகே) என்ற கருத்துக்களும் மீண்டும் மீண்டும் போதிக்கப்பட்டு தேச விடுதலை போருக்கு ஊக்க டானிக்காகப் பயன்படுத்தப்பட்டன.

## கோல்வால்கர் கருத்து

ஆனால் அடிப்படையில் பகவத் கீதை அதர்மத்தை–சாதி ஆதிக்கத்தை–

நிலைநாட்டும் நூலாக இருந்ததால் அது இந்துத்துவா சக்திகளின் தத்துவ ஆயுதமாகவே அது பயன்பட்டது. இன்னும் பயன்படுகிறது. குரு கோல்வாக்கர்– ஆர்.எஸ்.எஸ். ஸ்தாபகர்களின் போதனைகள் முழுவதையும் பரிசீலிப்பது இங்கு சாத்தியமல்ல... ஆனால் அவர் இந்துக்கள் என மத அடிப்படையில் திரட்ட முயன்ற போதும் மீண்டும் மீண்டும் கீதையை மேற்கோள் காட்டி சதுர் வர்ணத்தை நியாயப் படுத்தியதை நாம் நினைவிற் கொண்டாக வேண்டும்;

"நமது சமுதாயத்தை மிகவும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டும் இதர பிரதான பண்புக் கூறுகள் வர்ண விவஸ்தை (சாதி அமைப்பு முறை). ஆனால் இன்று சாதிய வெறி என்று இழிவுப்படுத்தப்படுகிறது"

இப்படிக் கூறும் கோல்வாக்கர் மேலும் அளக்கிறார்.,

"ஏற்றத்தாழ்வு மனப்பான்மை, உயர்வு, தாழ்வு உணர்வு வர்ண (சாதி) அமைப்புக்குள் எப்படியோ புகுந்து விட்டது. அந்த ஏற்றத்தாழ்வு சமீபத்தில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த தவறான விளக்கங்களை பிரிட்டிஷ்காரர்களுக்கு அவர்களுடைய பிரித்தாளும் சூழ்ச்சிக்கு மேலும் சாதகமான நிலைமைகளை உண்டாக்கியது. ஆனால் சாதி அமைப்பின் ஆரம்ப வடிவத்தில் அந்த சமுதாய ஏற்பாட்டில் இருந்த வேறுபாடுகள் பெரியசாதி என்றோ, சிறிய சாதி என்றோ– கீழ்மேல் என்றோ பாகுபாடுகள் கூறவில்லை. மறுபக்கத்தில் கீதை "ஒருவன் தனக்கு வாழ்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள கடமைகளை எந்தவிதமான தன்னலமும் இல்லாமல் தன்னை அர்ப்பணித்து நிறைவேற்றினால் அத்தகைய கடமைகள் மூலம் அவன் கடவுளை வழிபடுகிறான், என்று நமக்கு எடுத்துக் கூறுகிறது"

இப்படி கோல்வால்கர் வாதிடுவதின் நோக்கம் தெளிவானது அன்றோ!

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிமுறை தங்களுடைய பிரித்தாளும் சூழ்ச்சிக் கொள்கைகள் மூலம் சாதிப்பிரிவுகளை பயன்படுத்திக் கொண்டு நமக்குள் சண்டை மூட்டி விட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பாகுபாடுகள் அடிப்படையிலான சாதி அமைப்புகள் அண்மையில் தோன்றியது தானா? ராமாயணத்தில் உள்ள சம்புகனுடைய கதையும்; மகாபாரதத்தில் கர்ணனுக்கு வில்வித்தைக் கற்றுக் கொடுக்க துரோணர் மறுத்த கதையும்; ஒவ்வொருவரும் வர்ணாதர்மக் கடமையையே பற்றி ஒழுக வேண்டும் என்று நிர்பந்திக்கவில்லையா?

இது கோல்வால்கருக்கும் தெரியும். பிராமணிய மேலாதிக்கம் அவரது மனதில் இருக்கிறது. எனவே சாமர்த்தியமாக குறைபாடுகள் இருந்தாலும் வர்ணாஸ்ரம தர்மத்தை பற்றியொழுகினால் மட்டுமே பரகதி கிடைக்கும், இல்லாவிடில் நாசம் சேரும் என்கிற கீதையின் வாசகங்களை பொருத்தமாக மேற்கொண்டதை நாம்

கவனிக்க வேண்டும்.

## ஆதிக்க நூலே

ஆக கீதை விடுதலைப் போரின் ஆரம்பத்தில் சிலருக்கு ஊக்கமளித்திருப்பினும் அதன் தொடர் விளைவு மக்கள் ஒற்றுமையைச் சிதைத்திருக்கிறது—மத குரோதத்துக்கும் மோதலுக்கும் வழி செய்திருக்கிறது—சாதி வர்ணாஸ்ரம ஆதிக்கத்தை—பிராமணிய மேலாதிக்கத்தை நிலைநாட்டவே உதவி இருக்கிறது. கீதையின் சாரம் அதுவாக இருப்பதால் இந்துத்துவா சக்திகள் இன்றும் பல்வேறு மூளைச்சலவை வியாக்கியானங்களுடன் அறிவியல் தகவல் தொடர்பு சாதனங்களை பயன்படுத்திக் கொண்டு அக்காரியத்தையே செய்கின்றன. அரசியலில் கீதையின் பாத்திரம் மிகவும் நுட்பமானது. மிகவும் ஆபத்தானது. அதை எச்சரிக்கை உணர்வோடு அறிய பகவத் கீதை பற்றிய ஆய்வுகளும் அம்பலப்படுத்தல்களும் தொடர்ந்து செய்யப்பட வேண்டிய ஒன்று என்று புலப்படுகிறது.

## தமிழ் இலக்கியத்தில் பகவத் கீதை

பகவத் கீதை பற்றி பேசும்போது தமிழ் இலக்கியத்தில் அதன் தாக்கமும் எதிர் குரல்களும் சற்று விரிவாகவே ஆராயப்பட வேண்டிய ஒன்று.

"சங்க இலக்கியம் முதல் உரையாசிரியர்கள் காலமான கிபி.14 ஆம் நூற்றாண்டுவரை எழுந்த தமிழ் இலக்கியங்களில் பகவத் கீதை பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. சங்கப் பாடல்களில் திருமால் வணக்கமும் திருமால் பற்றிய பல்வேறு பாடல்களும் கதைகளும் காணப்படுகின்றன. கீதாஉபதேசத்தைப் பற்றிய குறிப்பு எந்தப் பாடலிலும் இல்லை,

**(கி.வீரமணி நூல் பக்கம் 168)**

வில்லிபுத்தூரார் பாரதத்தில்தான் கீதாஉபதேசம் இடம்பெற்றுள்ளதாக கி.வீரமணி கூறுகிறார்.

ஆனால் கீதையின் தத்துவ சாரமும் அதன் எதிர்ப்பு கருத்துகளும்—தமிழ் இலக்கியங்களிலும் உண்டல்லவா. அவை பற்றி ஆராய வேண்டும். கலாநிதி ரா. சுப்பிரமணியன் எழுதிய 'இந்திய சிந்தனை மரபு' என்கிற நூலில் கீதையும் குறளும் என்ற தலைப்பில் ஒரு விரிவான கட்டுரை எழுதியுள்ளார். அதில் சில மாற்று அபிப்பிராயங்கள் இருக்கக் கூடும். எனினும் கீதையைவிட குறள் எப்படி மேலானது என்பதை 35 பக்கங்களில் எழுதியுள்ளார்.

## கீதையும் குறளும்

அவர் கூறுகிறார்:

"உலகியல் வாழ்க்கையை நியாயப்படுத்திய நூல்களாக கீதை, குறள் இரண்டையும் கருதினாலும் குறளைப்போல கீதை வாழ்க்கையை முழு நிலையில் தரிசிக்கவில்லை. அது குறிப்பிட்ட ஒரு பிரச்சனையை மையப்படுத்தி நின்றே தன் பார்வைக்கு எட்டியவரையில் நோக்கியது. குறளின் பார்வைப்பரப்பு மிகப்பெரியது. கீதையில் ஒருவர் தமக்கு உரிய கடமை எது எனத் தீர்மானிப்பதற்கு உரிய உரிமை வழங்கப்படவில்லை. கண்ணன்—சமூக நலத்தின் ஒட்டுமொத்த வடிவமாக நின்று கட்டளையிடுகிறான், அர்ச்சுனன் அதனை ஏற்றுக்கொள்கிறான். ஆனால் குறளில் சுய அறிவைப் பயன்படுத்தித் தனது முடிவுகளை மேற்கொள்ளும் உரிமை பண்படுத்தப்பட்டுள்ளது. எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அறிவால் மெய்ப்பொருள் காணும்படி அது கூறுகிறது.

இக்கட்டுரை ஆசிரியர் குறள், கீதை இரண்டும் கிட்டத்தட்ட ஒரே காலக்கட்டத்தில் தோன்றியவை எனக் கருதுகிறார். கீதை, குறள் பற்றிய ஓர் ஒப்பு ஆய்வு மேலும் தத்துவ வெளிச்சம் பெற உதவும் என்பதில் ஐயமில்லை.

## ஆய்வுகள் பல

இப்படி கீதை பற்றிய ஆய்வுகள் பல உண்மைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வருகின்றன. அவற்றையெல்லாம் படித்தறிவது மிக மிக அவசியம்.

கடவுள் மறுப்பாளரான கி.வீரமணி எழுதிய "கீதையின் மறுபக்கம்" என்கிற நூல் ஏற்கெனவே இத்துறையில் ஆந்திர அறிஞர் வி.ஆர். நர்லா உட்பட பல்வேறு அறிஞர்கள், விவேகானந்தர், வினோபாவே போன்ற தலைவர்கள் உட்பட பலதரப்பட்டவர்கள் எழுதிய ஆய்வுகளில் கூறப்பட்டிருப்பவைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. ஏறத்தாழ இவரது கருத்தோடு பெரிதும் ஒத்துப்போகிற ஜோசப் இடமருகு எழுதிய "பகவத் கீதை – ஓர் ஆய்வு" என்கிற நூல் அறிவியல், பெண்ணுரிமை என்கிற கோணங்களில் சற்று உரக்கப் பேசுகிறது. சாராம் சத்தில் பகவத் கீதை வர்ணாஸ்ரம தர்மத்தை காக்கவும், பிராமண மேலாதிக்கத்தை காக்கவுமே உதவும் என்பதில் இருவரும் ஒத்த கருத்துடையவர்களாக உள்ளனர்.

எஸ்.ஜி. சர்தேசாய், திலிப்போஸ் ஆகியோரின் "மார்க்சியமும் பகவத் கீதையும்" என்கிற நூலும் மேற்கண்ட இருவரின் கருத்தை நிராகரிக்கவில்லை. மேலும் உறுதிப்படுத்தி அரசியல் அரங்கில் அதன் செயல்பாட்டை சற்று அழுத்தமாக பதிவு செய்துள்ளது. யார் கிருஷ்ணன்? புராண பொய்மைகள் குறித்து இவர்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. "யார் அந்தச் சங்கை ஊதி இருந்தாலும் அவர்தான் கிருஷ்ணன்" என்று கூறிவிட்டு அதன் கருத்துகளில் உள்ள தீமைகளைச் சாடுவதில் இந்நூல் முயன்று வெற்றி பெற்றுள்ளது.

அறிவுபூர்வமான, தத்துவ பூர்வமான ஆய்வுக்கு இது போதும். மயக்கத்தில்

கிடக்கும் இந்திய மக்களின் நெஞ்சத்தில் இருந்து பிரம்மைகளை உடைத்தெறிய புராண பொய்களை கூறுவதும் அவசியமாகிறது. அதே சமயம் பக்தர்கள் மனது புண்படுமானால் அதற்கு மேல் அவர்களை சிந்திக்க வைப்பது சாத்தியமல்ல. இதில் கி. வீரமணி நூலில் காணப்படுகிற சாட்டை அடி அணுகுமுறை ஜோசப் இடமருகு நூலில் கிடையாது. மேலும் இவரின் கிருஸ்துவும் கிருஷ்ணனும் கற்பனையே என்கிற நூல் மிகவும் சுவாரஸ்யமான ஒப்பு நூல். இவைகளோடு அம்பேத்கார், இஎம்எஸ் எழுதிய பல்வேறு நூல்களும் பலவகையில் கீதை சுரண்டும் வர்க்கத்தை பாதுகாக்கும் நூலாக உள்ளதையும் மேல்சாதி ஆதிக்கத்தை காக்கும் நூலாக உள்ளதையும் காட்டுகின்றன.

ஆக, பகவத் கீதை குறித்தும், அதன் ஆளுமை மற்றும் வஞ்சகம் குறித்தும் ஒரு விரிவான நுட்பமான ஆய்வு தேவைப்படுகிறது. தற்போதைய ஆய்வு நூல்கள் ஒவ்வொன்றும் ஒரு அம்சத்தை–ஒரு கோணத்தை நமக்கு காட்டுகின்றன. கீதையில் கண்ணன் அர்ச்சுணனுக்கு விஸ்வரூப தரிசனம் கொடுத்தது போல் கீதையின் குரூர வஞ்சகத்தை, முரண்பாடுகளை, அறியாமையை, ஆளுமையை, உளவியலை, எடுத்துக் கூறும் நூலொன்று செய்து தருவோன் பாசிச இந்துத்துவ எதிர்ப்புப் போரில் முனை மழுங்கா ஆயுதத்தை செய்து தருவோன் ஆவான். அது மதச்சார்பற்ற இந்தியாவை படைத்துக்காட்ட உதவும் என்பதில் ஐயமில்லை.

இங்கே இறுதியாக இரண்டு கேள்விகளுக்கு விடை கூறி இந்த அலசலை நிறைவு செய்வோம்.

## இரண்டு கேள்விகள்

ஒன்று, "பகவத் கீதையை இப்போதெல்லாம் யார் படிக்கிறார்கள், யாரோ சில பேருக்குத் தெரியும் பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. எனவே இதுபற்றி அதிகம் பேசுவது அவசியமற்றது அல்லவா?" இது சிலரின் வாதம்.

இது தவறானது. ஏனெனில் எந்த அறநூல்களானாலும், தத்துவ விளக்கங் களானாலும் அதை பெரும்பாலான மக்கள் நேரடியாக படித்து உணர்ந்து செயல்படுவது என்பது எப்போதும் இல்லை. ஆனால் சமூகத்தில் கருத்துகளை உருவாக்கும் இடத்தில் இருக்கும் அறிவு ஜீவி கூட்டமும், அவர்களோடு தொடர்புடைய மத்தியதர வர்க்கமும்தான் இவற்றை அறிந்து கருத்துகளை மக்களிடம் கொண்டு சேர்க்கின்றனர். இந்தியாவில் அந்த மேல்தட்டுப் பகுதியினர் பலவகையில் பகவத் கீதையை பயன்படுத்துவதை வானொலி, தொலைக்காட்சி, எழுத்துக்கள், பேச்சுகளில் காணமுடியும். அதுமட்டுமல்ல கீதையின் சாரம் என்று கடைகளில் தொங்கவிடப்படும் செய்திகளும், சில நடிகர்கள் உளறுவதுபோல் கூறும் தத்துவ சிதறல்களும் கீதையின் சாரமே. ஆகவே கீதை கூறும் கருத்து

மீண்டும் மீண்டும் இந்திய மக்களை முடக்கி பழமைவாதத்தில் வீழ்த்த உபயோகப்படுகிறது. எனவே இதுபற்றிய ஆய்வு செய்வோர் யாராயினும் அவர்கள் நம் பார்வைக்கு உரியவரே.

அடுத்து முக்கியமானது:

"எதிர்காலத்தைப் பற்றி என்ன? எதிர்காலம் என்று சொல்லும்போது அது சோஷலிசத்திற்கான போராட்டம் ஆகும். அந்த சோஷலிசம் என்பது இந்தியாவின் வருங்கால லட்சியமாக எல்லா முற்போக்கு சக்திகளும் ஏற்றுக் கொள்கின்றன"

"இப்போதும் அந்த சோஷலிசத்தை நோக்கி நாம் முன்னேறிச் செல்வதற்காக கீதையின் அறைகூவலையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று கூறக் கூடியவர்களும் உண்டு. அவர்களில் பலர் நல்லெண்ணத்துடனேயே கூறுகின்றனர். இந்த வாதம் எல்லாம் "இந்திய மக்களின் மரபுகள், உளவியல்" அடிப்படையில் எடுத்துக் காட்டப்படுவதாக கூறப்படுகிறது"

"இந்தக் கருத்து மிகவும் கவர்ச்சிகமாக உள்ளது. ஆயினும் கீதை நமது அவசியமான முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைய முடியாது என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்"

"கம்பளிப் பின்னல் போன்ற உணர்ச்சி வயமும், தவறான முறையில் வழிகாட்டப்படும் தேசபக்த பெருமையும் நமது லட்சியத்தை அடைவதற்கு அவ்வளவு சிறப்பான வழிகாட்டிகள் அல்ல"

"கீதையின் அடிப்படையான, மாற்ற முடியாத, மீற முடியாத கட்டமைப்பு சதுர்வர்ண–நாலுவர்ண–வர்ணாஸ்ரமும் வேதாந்தமும் ஆகும். சதுர்வர்ணம் என்றால் உள்ளமைந்த குலப்பிரிவுக்கு உட்பட்ட பிறப்பினால் சாதி வேறுபாடுகள் கொண்ட அமைப்பாகும், வேதாந்தம் என்றால் மருட்சி வாதமாகும்"

"கடந்த பல நூற்றாண்டுகளாக செய்யப்பட்ட எண்ணற்ற பல்வேறுபட்ட விளக்கங்கள், வியாக்கியானங்கள் எதுவும் கீதையை பற்றிய இந்த அடிப்படைக் கண்ணோட்டத்தை மாற்றவில்லை"

**(மார்க்சியமும் பகவத்கீதையும் பக்கம் 59,60)**

எனவே கீதை உழைக்கும் மக்கள் விடுதலைக்கு பயன்படாத நூல் மட்டுமல்ல, தடையாக வரும் தத்துவ அகழியும் ஆகும். எனவே அதை சுட்டிக்காட்டி மக்களை விழிப்படையச் செய்வது நமது கடமையாகிறது. அதற்கு பல்முனை ஆய்வுகள் அவசியம் தேவை. செய்வோம்; வெல்வோம்.

# மேலும் விளக்கம் பெற உதவும் சில நூல்கள்

1. கீதையின் மறுபக்கம் — **கி.வீரமணி**
   384 பக்கங்கள். விலை ரூ.100.00
   வெளியீடு: திராவிடர்கழக வெளியீடு
   50, ஈ.வெ.கி சம்பத் சாலை
   சென்னை 600 007.
2. பகவத் கீதை- ஓர் ஆய்வு — **ஜோசப் இடமருகு**
   192 பக்கங்கள் விலை ரூ.38
   வெளியீடு: அலைகள் அச்சகம்
   36, தெற்கு சிவன் கோவில் தெரு
   கோடம்பாக்கம், சென்னை–24
3. இந்திய சிந்தனை மரபு — **கலாநிதி ரா.சுப்ரமணியன்**
   216 பக்கங்கள் விலை 40.00
   சவுத் ஏசியன் புக்ஸ், 6/1 தாயார் சாகிப் தெரு,
   சென்னை 600 002.
4. மார்க்சியமும், பகவத் கீதையும் — **எஸ்.ஜி. சர்தேசாய், திலிப்போஸ்**
   150 பக்கங்கள், விலைரூ.7.00
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (அச்சில் இல்லை)
5. கிருஸ்துவும் கிருஷ்ணனும் கற்பனையே — **ஜோசப் இடமருகு**
   90 பக்கங்கள், விலை ரூ.20.00
   அலைகள் வெளியீட்டகம்
6. "வேதங்கள் ஓர் ஆய்வு" — **ஜோசப் இடமருகு**
   144 பக்கங்கள், விலை ரூ.25.00
   அலைகள் வெளியீட்டகம்
7. வேதங்களின் நாடு -இஎம்எஸ் — சவுத் ஏசியன் புக்ஸ்
8. இந்திய வரலாறு-இஎம்எஸ். — சவுத் இந்தியன் புக்ஸ்
9. சாதி ஒழிப்பு — **அம்பேத்கார்**
10. பார்பணியத்தின் வெற்றி — **அம்பேத்கார்**
11. இந்துயிசத்தின் தத்துவம் — **அம்பேத்கார்**
12. பிராமண மதம் — **சனல் ஜோசப் இடமருகு** (அலைகள் வெளியீட்டகம்)
13. பகவத் கீதை — **பாரதியார்**
14. பண்டைய இந்தியா - அதன் வரலாறும் பண்பாடும் — **டி.டி.கோசாம்பி**
15. இந்திய தத்துவங்களில் நிலைத்திருப்பனவும்அழிந்தனவும் — **தேவிபிரசாத் சட்டோபாத்யாய**
    சவுத் ஏசியன் புக்ஸ்

*முற்றும்*

# மார்க்சீய பார்வையில் அன்னை தெரசா

ஆங்கிலம் : விஜய் பிரசாத்

தமிழாக்கம் : ராமச்சந்திர வைத்தியநாத்

மத குருமார்களுக்கும், தேவ தூதுவர்களுக்கும் நம் நாட்டில் என்றுமே பஞ்ச மில்லை. இறைவனின் பெயரால் பல்வேறு விதமான சமூகத் தொண்டுகளை வறி யோர் மத்தியில் செய்து வந்த போதிலும், வறுமையின் அடிப்படையை அகற்றும் முயற் சிகளை இவர்கள் மேற்கொண்டதில்லை. அவர்களது வர்க்கச் சார்பு காரணமாய் அவற்றை மேற்கொள்ளவும் முடியாது.

சமீப காலங்களில் சர்வதேச அளவில் புகழ்பெற்ற அன்னை தெரசா பற்றி, சரி யான அணுகுமுறையும் மதிப்பீடுகளும் உருவாகவில்லை. அனைவருமே அவரது புகழ் பாடுவதில்தான் குறியாக இருக்கிறார்கள். இத்தருணத்தில் அன்னை தெரசா மறைந்த பின் அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் "அரசியல் விவகாரங்கள்" எனும் சித்தாந்த பத்திரிகை அன்னை தெரசா பற்றிய இக்கட்டுரையை 1997 செப்டம்பரில் வெளியிட்டது.

கல்கத்தாவில் பிறந்து தற்பொழுது இடதுசாரி இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு செயல்பட்டு வரும் விஜய் பிரசாத் இந்த ஆய்வுரையை எழுதியிருந்தார். இந்தக் கட்டுரையின் முக்கியத்துவம் காரணமாய் ஆஸ்திரேலியாவின் "மார்க்சிஸ்ட் ரிவ்யூ" தனது ஆகஸ்ட் 1998 இதழில் மறு பிரசுரம் செய்தது என்பது குறிப்பிடத் தக்கது.

அன்னை தெரசா பற்றி விஜய் பிரசாத் இந்த கட்டுரையை எழுதியுள்ள போதி லும், இன்றைய சூழலில் நம் நாட்டில் உள்ள அனைத்து மத குருமார்களுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் பொருந்துவதாகவே இது உள்ளது.

வறுமையின் அடிப்படையை பின்னணியை அறியவிடாமல் விதிப்பயனாக காட்டுவதும், அடுத்த பிறவியில் நற்பயனை பெற முடியுமென்பதையும், ஏழையின் சிரிப்பில்தான் இறைவன் உள்ளான் என்ற போதனையும் நமக்கெல்லாம் பழகிப் போனதுதான்.

எனவே அனைத்து மதங்களைச் சார்ந்த குருமார்கள், இறைத் தூதுவர்கள் மற்றும் பல்வேறு விதமான தொண்டு நிறுவனங்களைப் பற்றி சித்தாந்த ரீதியில் ஒரு சரியான பார்வையை உருவாக்கிக் கொள்ள வழி செய்யும் என்பதன் பேரில் இக்கட்டுரை இங்கு தரப்படுகிறது:

அன்னை தெரசா போன்றவர்களின் பங்காற்றலை மதிப்பீடு செய்வது என்பது சுலபமானதல்ல. ஒளிவட்ட பின்னணியில் உள்ள அவர்களைப் பற்றிய விமர்சனங்களை எழுப்புவது, சில தருணங்களில் எதிரானதாகி விடக்கூடும். இரண்டாவது அம்சம் அன்னை தெரசாவின் வாழ்க்கை முறை பற்றியும், தன்னிகரற்ற சேவையுணர்வு பற்றியும், நாம் நன்கறிந்துள்ளோம். மகாத்மா காந்திஜிக்கும், தெரசாவிற்கும் ஒரு சில அம்சங்களில் ஒற்றுமை உள்ளது. மாறப் புன்னகையுடன், அரை குறை ஆடையுடன், வறியோர் மத்தியில் வீற்றிருந்த மகாத்மா மீது தனிப்பட்ட கண்டனங்கள் யாவுமே அன்று அர்த்தமற்றதாக இருந்தது. இவ்வாறுதான் தெரசாவும் ஒரு மிகப் பிரம்மாண்டமான மனிதராகத் திகழ்ந்தார். இல்லையெனில் 1997 செப்டம்பர் 5ல் அவர் மரித்தபோது உலகு தழுவிய கவனம் உருவாகியிருக்க முடியுமா?

அன்னை தெரசா பற்றி நாம் எங்ஙனம் மதிப்பீடுகளை உருவாக்குவது? இதற்கு லெனின் வழிகாட்டியாக உள்ளார். 1905ல் அவர் மதம் பற்றிய வறட்டுத்தனமான பார்வைகள் கொண்டிருக்க வேண்டாம் என்று மார்க்சிஸ்டுகளை எச்சரித்தார். "பூவுலகில் சொர்க்கத்தை சிருஷ்டிக்கும் பொருட்டு நடைபெறக்கூடிய புரட்சிகர போராட்டத்தில், ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமை அவசியமானது. இது கற்பனையான விண்ணில் சொர்க்கத்தை அடைவதற்கான ஒற்றுமையைக் காட்டிலும் அதிமுக்கியமானது".

தெரசா பற்றி நாம் குறைத்து மதிப்பீடுகளை உருவாக்கவில்லை. உலகில் உள்ள வறியோரில் ஒரு பகுதியினர் மத்தியில் அவர்கள் துன்பத்திலிருந்து விடுதலை பெறும் பொருட்டு அவர் ஆற்றிய பங்கு சிறப்பானதுதான். எளிதில் உணரமுடியா மதச் சித்தாந்தத்தின் அடிப்படையில் அவரைப் பற்றிய மதிப்பீடுகளையும் அவரது பணிகளின் எல்லைகள் பற்றியும் அறிய முயல்வோம்.

## வறுமையின் பின்னணியும் கடவுளின் தூதுவரும்

உலகெங்கிலும் பரவி நிற்கும் ஏகாதிபத்தியம், அதன் அரசியல் செயல்பாடுகள் மற்றும் கோட்பாடுகளின் ஒரு பகுதியாகவே, அமைந்துள்ள தெரசாவின் பணிகளை நாம் சரிவர மதிப்பீடு செய்ய முடியும். முதலாளித்துவம் உருவாக்கிய வறுமை மற்றும் துன்பங்களுக்கு எதிராக, உண்மையான முறையில் சவால்களை எழுப்பி, இத்தகைய

சக்திகளுக்கு எதிரான கிளர்ச்சியை தெரசா நடத்தவில்லை. அதற்கு பதிலாக வறுமை மற்றும் துன்பங்களை முதலாளித்துவத்தின் நடைமுறை சிக்கலாக ஏற்று, அதற்கான கழுவாய் முயற்சிகளாக தனது பணியை மேற்கொண்டார். இது பற்றியே நாம் விரிவாக ஆய்வு செய்திட வேண்டும்.

தெரசாவை உயர்த்திப் பிடிப்பவர்கள் அவர் வாழ்ந்த காலத்திலேயே யதார்த்த உலகிலிருந்து அவரை நகர்த்தி, கற்பனா உலகின் உச்சியில் வைத்து பூசிக்கத் துவங்கினர். அவரது கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் பற்றிய விமர்சனங்களை உருவாக்காது தடுக்கும் வகையில், தெரசாவை கடவுளின் தூதுவராக சித்தரித்து, அவர்களது பணிகளை மிகைப்படுத்துவது என்பது நடைபெற்று வருகிறது.

தெரசாவை உயர்த்திப் பிடித்து பூசிக்கத் துவங்குவது 1960களின் பிற்பகுதியில் துவங்கியது. 1969ல் மால்கம் மகரிட்ஜ், தெரசா குறித்த செய்திப் படமொன்றை தயாரித்தார். பின்னர் 1971ல் அவரைப் பற்றிய புத்தகமொன்றை (SOMETHING BEAUTIFUL FOR GOD) வெளியிட்டார். இது உள்ளூர் அளவில் சமூக சேவை செய்து வந்தவரை கடவுளின் தூதுவராக சித்தரிக்க முயற்சித்தது. தவறான கருத்துக்கள் இருந்த நிலையில் தெரசா அற்புதங்கள் நிகழ்த்தியதாக மகரிட்ஜ் பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். உடனடியாக தகவல் தொடர்பு ஊடகம் யாவுமே ரஜ, கத, துரக, பதாதியாய் கல்கத்தாவில் இறங்கியது. அத்தோடின்றி அண்டி வாழ்வதையே தொழிலாகக் கொண்டவர்களும் வந்தனர். தெரசாவை மிகப் பிரம்மாண்டமாய் சித்தரிப்பதே இவர்கள் நோக்கமாயிருந்தது.

## கல்கத்தா - போராட்ட நகரம்

வரலாற்று ரீதியாகவே கல்கத்தாவை துன்பச்சின்னமாக சித்தரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் இருந்த கடந்த கால வரலாறும், தற்போது நடைபெறும் கம்யூனிஸ்ட் ஆட்சியும் இந்த சித்தரிப்பிற்குள் கொண்டு வரப்படவில்லை. சந்தேகத்துக்கு இடமின்றி டொமினிக் லேப்பியரின் பிரசித்தி பெற்ற (THE CITY OF JOY) புத்தகமும், ஹாலிவுட் திரைப்படமொன்றும் இத்தகைய சித்தரிப்பை உறுதி செய்தது. இது மட்டுமின்றி ஜான் ஹுட்னீக் எழுதிய சிறப்பானதொரு நூலையும் (RUMOUR OF CALCUTTA: TOURISM, CHARITY AND THE POVERTY OF REPRESENTATION) சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கிழக்கிந்திய கம்பெனி நடத்திய பேயாட்சி குறித்து கேள்விகள் எழுப்புவோர் இல்லை. அது பற்றிய அக்கறையும் கிடையாது. 1769 – 70ல் நிகழ்ந்த மாபெரும்

பஞ்சத்தினால், வங்க மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மரித்தது பற்றியும், இதற்கு பொறுப்பாக இருந்த பிரிட்டிஷ் ஆட்சி குறித்தும் ஒரு சில தரப்பில் மட்டுமே ஐயங்கள் எழுந்தன. இதேபோன்று 1943 பஞ்சத்திலும், மூன்றிலிருந்து ஐந்து மில்லியன் மக்கள் அழிந்தபோதும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பங்கு மற்றும் பொறுப்புகள் குறித்து எத்தரப்பிலும் அக்கறை கொள்ளப்படவில்லை. இந்த பஞ்சகால அனுபவங் கள் யாவுமே ஏகாதிபத்தியத்தின் நடைமுறைகளை வெளிப்படுத்துவதாக இருந்தது. அதேபோன்று கிழக்கு பாகிஸ்தானில் நடந்த நிகழ்வுகள் குறித்தும் எவரும் அக் கறை கொள்ளவில்லை. 1971க்குப் பிறகு பங்களாதேசமாக உருமாறிய அந்நாட்டி லிருந்து 12 மில்லியன் அகதிகள் மேற்கு வங்கத்தில் நுழைந்தனர்.

மகரிட்ஜ் மற்றும் அவரைப் போன்றவர்கள் வங்கத்தில் வறுமை உற்பத்தியாகி நீடித்திருக்கும் விதம் குறித்து சற்றும் கவலைப்பட்டதாக தெரியவில்லை. பதினாறு மில்லியன் மக்களால் கல்கத்தா நிரம்பி வழிகிறது. இதில் பெருமளவிலானவர்கள் நடைபாதையில் வாழ்ந்து வருகின்றனர். ஏகாதிபத்திய இந்தியாவின் தலைநகராக இருந்த கல்கத்தா தற்பொழுது மேற்கு வங்க மாநிலத்தின் தலைநகராக திகழ்ந்து வருகிறது. மேற்கு வங்கத்தில் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான ஆட்சி நடை பெற்று வருகிறது.

புகழ்பெற்ற மானுடவியல் அறிஞர் கிளாட் லெவி ஸ்டிராஸ் கல்கத்தாவின் வறுமை பற்றி கூறியவை குறிப்பிடத்தக்கது. "இந்திய நகரங்களில் வறுமை என்பது இயற்கை சூழலுடன் இணைந்து போய்விட்டது. நகரங்கள் சுபிட்சமாக இருக்க வறுமை அத்தியாவசிய தேவையாக உள்ளது" என்று ஸ்டிராஸ் கூறுகிறார். அவரைப் பொறுத்தமட்டில் இந்தியா துயர் மிகுந்த துணைக் கண்டம். இந்திய மக்கள் வறுமைத் துயரில் தத்தளிப்பதற்கு மக்கள் தொகைதான் காரணம் என்று மேலும் அவர் கூறுகிறார். லேப்பியர், மகரிட்ஜ் போன்றவர்களைப் போன்றே ஸ்டிராஸும் வறு மையின் காரணிகளை, மால்தூசியன் விதிகளின் பின்னணியில் ஆய்வு செய்கின் றார். இப்பிராந்தியத்தின் கட்டமைப்பு பற்றி கணக்கில் கொள்ளாமல் சித்தாந்தங்கள் ஏகாதிபத்தியத்தின் நலனைக் காக்கும் வகையில் கையாளப்படுகிறது. மேலும் வெகு சாதாரண முறையிலேயே பிரச்சனைகள் அணுகப்பட்டு வருகிறது. இதுபோன்ற எழுத்தாளர்கள், சர்வதேச நிதி முதலீடுகளின் சுரண்டலுக்கு ஆளாகி ஒடுக்கப்படும் மக்களால் நிரம்பி வழியும் நகரமாக சித்தரிப்பதற்கு பதிலாக கல்கத்தாவை புதை குழியாக சித்தரித்து வருகின்றனர்.

## கம்யூனிசத்தை வீழ்த்த அமெரிக்க நிதியுதவி

"முதலாளித்துவத்திற்கு எதிரான இயக்கங்களை நடத்துவதன் மூலமே இதற்கு விமோசனம்" என்பதற்கு மாற்றாக, இறைத் தூதுவருக்கு சாதகமான பேச்சில்தான், அது பற்றிய விளம்பரத்தில்தான் தீர்வு என்பதாக சித்தரிப்பு உருவாகியது. கல்கத்தாவிற்கு செல்வதும், அங்கே வாழ்வதும் சுலபமானவையல்ல. மற்றைய முதலாளித்துவ நாடுகளின் நகரங்களைப் போல வறுமை நகருக்கு வெளியே விரட்டியடிக்கப்படவில்லை. அதாவது வறியோர் புறநகருக்கு துரத்தியடிக்கப்படவில்லை. மாறாக நகரமே வறுமைப் பிடியில் சிக்குண்டுள்ளது. வறுமையை நேரடியாக எதிர்கொள்வது என்பது தவிர்க்க முடியாதது. ஆயின் நகரின் இடர்பாடுகளை ஆய்வு செய்வோருக்கு வறுமையின் காரணிகளை அறிவது கடினமாகத்தான் உள்ளது. மால்கம் மகரிட்ஜ் கல்கத்தாவிற்கு விஜயம் செய்தபோது, வங்கத்தில் கூட்டாட்சி பரிசோதனை நடைபெற்று வந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பங்களா காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகள் இணைந்த ஆட்சி நடைபெற்று வந்தது. அவர்கள் மக்களை இணைத்து செயல்படுவதையே குறிக்கோளாக கொண்டிருந்தனர். அத்தோடு வெறுமனே சிக்கலின்றி ஆட்சியை நடத்துவதற்கு பதிலாக, விவசாயியையும், தொழிலாளியையும் திரட்டி அதிகாரத்தை அவர்களுக்கே வழங்கிட முயற்சிகள் மேற்கொண்டனர்.

இத்தகைய செயல்பாடுகளை கம்யூனிஸ்டுகள் தலைமையிலான கூட்டணி மேற்கொண்டபோது, காங்கிரசும், அவர்களின் அமெரிக்க கூட்டாளிகளும், கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக நரவேட்டையை நடத்தினர். இது சம்பந்தமாக 1978ல் அமெரிக்க ராஜ தந்திரியாக (?) இருந்த டேனியல் மொய்னிஹன் வெளியிட்ட கருத்துக்களை பலர் மறந்திருக்கக்கூடும்.

"இந்திய அரசியலில் நாங்கள் இருமுறை குறுக்கிட்டோம். இரண்டு முறை என்று மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அரசியல் கட்சிக்கு பணம் அளித்திடும் வகையில்தான், எங்கள் குறுக்கீடு அமைந்தது. கேரளம் மற்றும் மேற்கு வங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலில் வெற்றி பெறக்கூடிய நிலையில் இருந்தது. அதை முறியடிக்கும் பொருட்டே, காங்கிரஸ் கட்சிக்கு நாங்கள் நிதியுதவி செய்தோம்".

மொய்னிஹன் குறிப்பிட்ட இரு முறை மட்டுமே குறுக்கீடு என்பதில் நமக்கு மாறுபட்ட கருத்துக்கள் உள்ளது. ஐக்கிய முன்னணி அமைச்சரவைக்கு எதிராக தொடர்ச்சியான குறுக்கீடுகள் உருவாக்கப்பட்டன. சமத்துவம் மற்றும் சுதந்திரம் மீது பற்றுறுதி கொண்ட காரணத்திற்காக இளைஞர்கள் போலீசாரால் கொல்லப்பட்டனர். முதன் முறையாக 1977ல் இடது முன்னணி அரசு தேர்தலில் வென்றதோடு, தொடர்ச்சியாய் 20 ஆண்டுகளாக இடைவெளியின்றி ஆட்சி நடத்தி வருகிறது.

விவசாயக் கொள்கையில் பெரும் மாற்றத்தை உருவாக்கி, வறிய நிலமற்ற மக்களை திரட்டி அவர்களது உரிமைகளை மீட்டதோடு, அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியதை இடது முன்னணியின் முக்கிய சாதனையாக கொள்ள முடியும். உள்ளூர் பிரபுக்கள், லேவாதேவிக்காரர்களிடம் சாதாரண மக்கள் அடி பணிந்து நிற்காது, தங்கள் நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, உள்ளூர் அளவில் ஜனநாயக நடவடிக்கைகளில் பங்கேற்று விழிப்புணர்வுடன் செயல்பட முடிந்தது.

இடது முன்னணியின் முக்கியமான செயல்பாடுகள் கிராமப்புறங்களில் மையம் கொண்டிருந்தன. மக்களது பிரச்சனைகளை கவனிக்கக்கூடிய விதத்தில், புதிய கட்டுமானம் உருவாகியது. கல்கத்தா போன்ற நகரப் பகுதிகளின் பிரச்சனை பின்னரே எடுத்துக் கொள்ளப்பட்டது. இடது முன்னணியின் எதிருள்ள பிரச்சனைகள் பிரம்மாண்டமானவையாக இருப்பினும், ஆட்சியும் அதை நடத்தும் கட்சிகளும் முழுமையான உறுதியுடன் எதிர்கொண்டன. கம்யூனிஸ்ட் எதிர்ப்பையே நோக்கமாகக் கொண்டுள்ள அதி மேதாவிகள், இத்தகைய வளர்ச்சிப் போக்கினை ஒதுக்கிவிட்டு இறை தூதுவரின் செயல்பாடுகளை முரசறைந்து பரப்புவதில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளனர். இடதுசாரிகளை விரட்டியடித்தாகிவிட்டதென்றால் ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கக்கூடியது தெரசா மட்டுமே.

## அன்பே தெய்வம், அன்பே மருந்து

தெரசாவின் பூர்வோத்திரத்தைவிட அவர் பற்றிய கற்பனையே விஞ்சி நின்றது. அதுவும் பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்ட பிறகு கற்பனையான சித்தரிப்புகள் அதிகரித்தன. முதலில் இந்திய அரசு பத்மஸ்ரீ பட்டமளித்து தாமரையை வழங்கியது. 1971ல் வாடிகனின் கத்தோலிக்க குரு பீடம், 23வது ஜான் நினைவு அமைதிப் பரிசை அளித்தது. அமெரிக்க அரசு நற்செயலாளர் மற்றும் கென்னடி நினைவுப் பரிசை அளித்தது. 1973ல் பிரிட்டிஷ் அரசு டெம்பிள்டன் அன்பளிப்பை வழங்கியது. 1975ல் ஐ.நா. பரிசொன்றை வழங்கியது. இவை யாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் சமாதானத்திற்கான நோபல் பரிசு 1979ல் வழங்கப்பட்டது.

நம்மில் நிறைய பேர் தெரசாவின் பூர்வோத்திரத்தை அறியவில்லை. இறைத் தூதுவராகவே அவதரித்ததாக கருதி வருகின்றனர். அல்பேனியாவில் 1910ல் பிறந்த இவரது இயற்பெயர் ஆக்னெஸ் போஜாஷ்யூ. இளமையிலேயே இறை பணி அமைப்பில் சேர்ந்த அவர், 1929ல் முதன் முதலாக இந்தியா வந்தார். லோரெட்டா சகோதரிகள் எனும் அமைப்பு வசதி படைத்தோருக்காக பல்வேறு பள்ளிகளை கல்கத்தாவில் நடத்தி வந்தது. இதில் ஆசிரியையாக ஆக்னெஸ் இருந்தார். மேரி

வார்ட் எனும் ஆங்கிலப் பெண்மணிதான், 1609ல் லோரெட்டா சகோதரிகள் எனும் இறைப்பணி அமைப்பை துவக்கினார். கிருத்துவ சபை நிர்வாகத்தின் கீழ் கல்வித் துறையில் செயல்பட்டு வந்த இந்த அமைப்பு உலகெங்கிலும் வசதி படைத்தோருக்கான பள்ளிகளை நடத்தி வந்தது. பத்திருபது ஆண்டுகள் கல்கத்தாவில் ஆசிரியையாக பணியாற்றிய ஆக்னெஸுக்கு, கத்தோலிக்க குரு பீடமான வாடிகன் சபை அறத் தொண்டிற்கான பிரத்யேக சபை ஒன்றை துவக்க அனுமதியளித்தது.

"வறியோர் மற்றும் கீழ்நிலையிலுள்ளோர் மீதான இறைவனின் கருணை உணர்வு தொடரும் விதத்தில் சுதந்திர இந்தியாவில் 1950ல் மிஷினரீஸ் ஆப் சாரிடி துவக்கப்பட்டதாக" அதன் பிரகடனம் அறிவித்தது. தெரசா உருவாக்கிய சபை பல்வேறு துணை அமைப்புகளை நடத்தத் துவங்கியது. நோய் வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயில் உள்ளவர்க்காக ஒரு விடுதியும், தொழு நோயாளிகளுக்கான ஒரு கிராமத்தையும், சிறுவர்களுக்கான ஒரு விடுதியையும் நடத்தி வந்தது. இதனால் பலருக்கு மருத்துவ ரீதியாக நிவாரணம் இல்லையென்றாலும், அன்பு மற்றும் பரிவின் பேரில் ஆறுதல் பெற்றனர். தெரசாவின் சகோதரிகள் மருத்துவத் துறையில் தேர்ச்சியோ, அனுபவமோ பெற்றவர்கள் அல்லர். எனவே வியாதியஸ்தர்களையும், இறக்கும் தறுவாயில் உள்ளவர்களையும் அன்பின் அடிப்படையிலேயே குணப்படுத்த முடியும் என்று உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்தனர்.

## அறிவியலை அறியாத மருத்துவச் சேவை

1925ல் அமெரிக்காவைச் சார்ந்த அன்னை அன்னா டெங்கல், மருத்துவத் துறையில் பயிற்சி அளிக்கும் பொருட்டு பாட்னாவில் சபையொன்றை துவக்கியிருந்தார். ஏற்கெனவே 1948ல் தெரசா அச்சபையில் சிறிது காலம் மருத்துவப் பயிற்சி பெற்றிருந்தார். ஆயின் அவரது சகோதரிகள் மருத்துவக் கல்வியையோ, அது சார்ந்த மற்றைய பயிற்சிகளையோ பெற்றவர்களல்லர்.

1994ல் புகழ்பெற்ற மருத்துவர் ராபின் பாஃக்ஸ், கல்கத்தாவிலுள்ள அன்னை தெரசாவின் காருண்யா இல்லத்திற்கு வந்திருந்தார். அங்கிருக்கும் சகோதரிகள் நவீன அறிவியலை பயன்படுத்தி மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளவில்லை என்ட தை அவர் கண்டறிந்தார்.

"குறிப்பாக மலேரியா போன்ற நோய்க்கூறுகளை கண்டறிவதற்காக நடத்தப்படும் ரத்தப் பரிசோதனைகள் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. மேலும் குணப்படுத்தக்கூடிய நோய்கள் மற்றும் குணப்படுத்த முடியாதவை பற்றி திருச்சபையின் சகோதரிகள் அறிந்திருக்கவில்லை. இது போன்ற அறிவியல் ஆய்வு முறைகள்

திருச்சபை நெறிமுறைகளுக்கு விரோதமானது.

அன்னை தெரசா சாதகமான சூழலை விரும்புவாரேயொழிய நடவடிக்கைகளை அல்ல. பொருளியல் மற்றும் அறிவியல் அடிப்படையை கொள்ளலாகாது என்பதோடு, அதைத் தடுக்கும் வகையிலேயே தெரசாவின் விதிமுறைகள் அமைந்திருந்தன. நோயின் கொடிய நிலை மற்றும் அதற்கான நிவாரணத்தைப் பொறுத்தமட்டில் காருண்யா இல்லத்து சகோதரிகள் எந்த முறையையும் கொண்டிருக்கவில்லை. இறப்போர்க்கு எவ்வித நிவாரணமும் அங்கு கிடையாது. பக்தியின் வீச்சினால் நோயிலிருந்து நிவாரணம் பெற முடியும் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. ஆயினும் எவ்வித மருந்துகளைக் கொண்டும் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்பதை அறிந்தவுடன் மனம் வருந்தினேன்" என்று பாஃக்ஸ் கூறுகிறார்.

தெரசா குறித்து கிறிஸ்டோபர் ஹிட்சென்சின் மதிப்பீடு நியாயமானதாகவே காணப்படுகிறது. பிணியில் வருந்துவோருக்கு நேர்மையான வழியில் நிவாரணம் அளிப்பது அவசியமல்ல. அதி தீவிர நம்பிக்கையின் பேரில் அவர்கள் மரணத்தையும், துன்பத்தையும் ஏற்பதே முக்கியமானது. ஆதரவற்ற குழந்தைகள், கைவிடப்பட்டவர்கள், தொழுநோயாளிகள், நாள்பட்ட நோயாளிகள் இவர்கள் அனைவருமே காருண்யா இல்லத்திற்கு தேவைப்பட்டனர். அவர்களது அன்பை வெளிப்படுத்திட அதற்கு ஆளாகக்கூடிய கருவியாக இவர்கள் இருந்தனர். அவர்கள் எந்த விதத்திலும் இது பற்றி குற்றங்குறை கூற முடியாது. அவர்களது ஆதரவற்ற நிலையே இதற்குரிய பிரத்யேக அம்சமாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

## பாவப்பட்டவர்களே கடவுளின் கிருபைக்கு பாத்திரமாவார்கள்

கம்யூனிஸ்டுகளின் அனுபவங்கள், செயல்பாடுகளிலிருந்து முற்றிலும் இது வித்தியாசமானது. இடது முன்னணி வறுமையின் வேர்கள் பற்றி அக்கறையுடன் செயல்பட்டது. ஏகாதிபத்தியம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் பொருட்டு, வறுமைப் பிடிக்குள்ளே மக்களை நிறுத்தி வைத்தது. கம்யூனிஸ்ட் இயக்கமோ ஒரு சிலருக்கு தர்மம் செய்வதற்கு மாற்றாக, அதிகாரத்தையும், ஜனநாயகத்தையும் ஒட்டுமொத்தமாக உழைப்பாளி மக்களுக்கு அளித்திடும் முயற்சிகளை மேற்கொண்டது. அத்தறுவாயில்தான் அரசியல் விழிப்புணர்வு கொண்ட மக்கள், தங்களது உரிமைகள் மற்றும் உற்பத்தி முறையில் தங்கள் பங்காற்றல் பற்றி கவனம் கொண்டு இயக்கங்களை நடத்தி வந்தனர்.

பாவப்பட்டவர்களே கடவுளின் கிருபைக்கு பாத்திரமாவார்கள் என்று மத்தேயுவின் சுவிசேஷம் கூறுகிறது. அவர்களுக்கே தேவனின் சொர்க்கத்தில் இடமளிக்கக்

கூடும் என்றும் அது மேலும் கூறுகிறது. ஏழ்மையில்தான் இறைவனைக் காண முடியும் என்ற கருத்தோட்டத்தில் கிருத்துவ மதமும், தெரசாவும் உடன்பட்டிருந்த னர். இதே கருத்தைத்தான் மகாத்மா காந்திஜியும் கொண்டிருந்தார். இத்தனைக்கும் முறைப்படுத்தப்பட்ட மதப்பிடிப்பு என்பது காந்திஜியிடம் கிடையாது. மகாத்மா காந்திஜி, தெரசா ஆகியோர் ஏழைகள் மீது பற்று கொண்டிருந்தபோது வறுமை நீங்க வேண்டுமென விரும்பினர். ஆயினும் அதே நேரத்தில் ஏழ்மையை உயர்ந்த தாக சித்தரித்து அவர்களால் மட்டுமே மகிழ்ச்சியாக வாழ முடியுமென உபதேசித்த னர்.

காந்திஜி வறுமையின் பெருமை குறித்து ஏராளமாக எழுதிக் குவித்துள்ளார். வறுமையினால் பெறக்கூடிய மகிழ்ச்சியை பெற்றிட, பாக்கியம் செய்திருக்க வேண் டும் என்று சிலாகித்து எழுதியுள்ளார். இது பற்றி 1931ல் லண்டனில் அவர் கூறியது குறிப்பிடத்தக்கது.

"வறுமைப்பிடியில் உள்ள மக்கள்தான் உலகின் அனைத்து செல்வாதாரங்களை யும் கொண்டவர்கள்" என்று அவர் எழுதினார். தேவைப்படுபவை யாவுமே வறி யோரை தேடி வரும் என்றே அவர் கூறினார். உணவு தேவையென்றால் அது நம்மை தேடி வரும் என்கிறார் மகாத்மா. இது எந்த அளவிற்கு சரியாக இருக்கும்? இவ்வழி யில்தான் தெரசாவும் வறுமையை இழக்கலாகாது என்று கூறுகிறார். வறுமை தீயவையாக இருப்பினும் மகிழ்வு கொண்டு கொண்டாடப்பட வேண்டியதாகவே அவர் கருதுகிறார். வறுமையில் உள்ளவர்கள் தர்மத்தை பெறுவதன் மூலம் உலகில் பெருமையை பெற முடியுமாம். இத்தகைய அணுகுமுறை வறுமையின் காரணிகள் பற்றி அக்கறை கொள்ள வழிவகுக்கவில்லை. அதற்கு பதிலாக ஏழைகளுக்கு தான தர்மம் செய்யக்கூடிய புதிய தொழில் வடிவத்திற்கு ஆதரவு தேடுவதையே இவர்கள் கொண்டிருக்கிறார்கள். இத்தறுவாயில் தெரசா மறைவிற்குப் பின் பொறுப்பேற்ற சகோதரி நிர்மலாவின் வாக்கியங்களை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

"வறுமை எக்காலத்திலும் நீடித்து இருக்கும். எனவே வறியோர் அது குறித்து சரியான பார்வை கொள்ள வேண்டும். இறைவன் மீதுள்ள நம்பிக்கையை பெற்றிட வறுமையே வழிவகுக்கும்".

தெரசாவின் திருச்சபை இரந்து வாழும் நிலையையும், விதியே வலியது என்பதையுமே மக்களிடம் உபதேசிக்கிறது. உண்மையிலேயே சமூக மாற்றம் பற்றி அக்கறை கொண்டோர், ஏழை மக்களின் அரசியல் உணர்வுகளை மேம்படுத்துவதன் மூலமே வெற்றி பெற முடியும். ஆயின் இதன் தடைக்கல்லாக இத்தகைய மலைப்

பிரசங்கங்கள் இருந்து வருகின்றன. ஆயினும் கத்தோலிக்க மதத்திற்குள்ளேயே இது பற்றி பல்வேறு விதமான போக்குகள் இருந்து வருகிறது.

## குரு பீடமும் பழமைவாதமும்

1961 மே 15 அன்று கத்தோலிக்கர்களுக்கு 23வது போப் ஜான் முக்கியமான தொரு சுற்றறிக்கையை விடுத்தார். மனிதனின் அன்றாட வாழ்வில், அவனது தினசரி பிரச்சனைகளில், கல்வியில் அவனது நன்னலத்தில், செல்வாதாரத்தில் திருச்சபை அக்கறை கொண்டாக வேண்டும் என அவ்வறிக்கை அறிவுறுத்தியது. ஏற்கெனவே 13வது போப் லியோ 1891ல் வரலாற்று சிறப்பு பெற்ற சுற்றறிக்கை யொன்றை விடுத்தார். இது பற்றி 23வது போப் ஜான் நினைவு கூர்கிறார். "தொழிலா ளர்கள் தங்களுக்குள் சங்கம் அமைத்து ஒன்று சேருவது என்பது, இயல்பான இயற் கையான உரிமையாகும். இந்த உரிமையை பாதுகாத்திடுங்கள்" என்று அவர் 1891ல் அறைகூவல் விடுத்தார். மேலும் "முதலாளித்துவம் என்பது ஒழுக்கக்கேடானது" என்கிறார் போப் லியோ. "ஏராளமான செல்வம் ஒரு சிலரின் கையில் குவிந்திருக் கிறது. அதே நேரத்தில் பெருமளவிலான உழைப்பாளிகளின் துயரங்கள் அதிகரித்து கடுமையான சிக்கலுக்கு ஆட்பட்டு வருகின்றனர். பசியைப் போக்குமளவிற்கு கூட கூலி போதுமானதாக இல்லை. வேலை நிலையோ மிகவும் ஆபத்தான சூழலில் உள்ளது. உடல் நலனுக்கு மட்டுமின்றி, குண நலனுக்கும், மத நம்பிக்கைக்கும் ஆபத்தளிப்பதாகவே அவை இருந்து வருகிறது".

போப் லியோவின் இந்த சுற்றறிக்கை 1962 – 65ல் இரண்டாவது வாடிகன் குழு மத்தின் ஆவணமாக உருமாறியது. 23வது போப் ஜானுக்கு முந்திய மத குருமார் களின் பழமை வாதத்தை இந்த ஆவணம் தகர்த்தது. அன்னை தெரசா வாடிகனின் இரண்டாவது குழுமத்தின் ஆவணத்திற்கும், 23வது போப் ஜானுக்கும் தொடர்ச்சி யாக எதிர்ப்பு தெரிவித்து வந்தார் என்பது முக்கியமானது. தற்போதைய போப்பின் பழமைவாத கருத்துக்களுடன், கத்தோலிக்க கோட்பாடும் ஒத்துப் போவதால் போப்பை அன்னை தெரசா வரவேற்றார். கருச்சிதைவையும், பெண்கள் துறவறம் மேற்கொள்வதையும் வன்மையாக கண்டிப்பதால் தெரசாவும், இரண்டாவது போப் பாலும் ஒரே பாதையில் இணைந்துள்ளனர். அதே நேரத்தில் இருவருமே, மனித விமோசனம் பற்றிய மதக் கருத்துக்களில் இடம் பெற்று வரும் முற்போக்கு அம்சங் கள் பற்றி அக்கறை கொள்ளவில்லை.

1980ல் இரண்டாவது ஜான் பால் புகழ்பெற்ற கன்னிகாஸ்திரியை தனது திருச் சபைக்கு வரும்படி வேண்டுகோள் விடுத்தார். கருச்சிதைவு, கருத்தடை முறை

களுக்கு எதிராக இருவரும் கூட்டறிக்கையொன்றை விடுத்தனர். 1994 பிப்ரவரி 5 அன்று வாஷிங்டனில் நடைபெற்ற காலை விருந்துபச்சார பிரார்த்தனைக் கூட்டத்தில் தெரசா மனித குலத்தின் அமைதிக்கு இன்று கருச்சிதைவு பெருஞ்சவாலை விடுப்பதாக அனைவரையும் எச்சரித்தார்.

கேத் போலீட் எனும் பெண்ணீய ஆய்வாளர் டயானா ஸ்பென்சர் மற்றும் தெரசா பற்றி தெரிவித்த கருத்துக்கள் ஆழமானவை. இவர்கள் நிலப்பிரபுத்துவ வம்சா வளியில் பூத்த மலர்கள். அடிப்படையில் ஆணாதிக்க குணாம்சத்தைக் கொண்ட நிறுவனங்களின் உயர்நிலைகளில் இவர்கள் இருப்பினும், அதிகாரம் என்பது இவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது. அதன் ஆளுமைக்கும், பழமைவாத குணப்பாங்கிற்கும் உள்ளடங்கியே இவர்கள் இருக்க வேண்டியுள்ளது. தற்போதைய போப்பின் பிற்போக்கான செயல்பாடுகளின் மூலம் தெரசாவின் நற்செயல்களை மறைக்க முடியாது. இத்தனைக்கும் தெரசாவே வேண்டி விரும்பி போப்பின் பழமைவாதத்திற்கு கவசமாக இருந்து வருகிறார். ஏழைகளுக்கு அனுகூலமளிக்கக்கூடிய சமூக நீதியையும், முற்போக்கு செயல்பாடுகளையும் கொண்டதுதான் கத்தோலிக்க கோட்பாடுகள் என்றும், இதை வாடிகன் இரண்டாவது குழுமத்தின் பிரகடனம் உறுதிப்படுத்தியது என்றும் பலர் நினைக்கக்கூடும். ஆயின் 23வது போப் ஜான், வறுமையின் அடிப்படைகளை கண்டறிந்து அதற்காக போரிடுபவரல்ல. உற்பத்தி முறைகளின் கட்டுப்பாட்டை பெரும் மூலதனம் தொடர்ந்து பாதுகாத்திட வேண்டும் என்று தனது ஆதரவாளர்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## விமோசன கோட்பாடும் மக்கள் போராட்டமும்

1922 முதல் 39 வரை இருந்த 11வது போப் பயஸ் கருத்துக்கேற்ப 23வது போப் ஜானும், கம்யூனிசத்திற்கும், கிருத்துவத்திற்கும் தெள்ளத்தெளிவான வேறுபாடு இருப்பதை அங்கீகரித்தார். மனித சமூகத்தின் மீதுதான் சோஷியலிச கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளது. மற்ற விஷயங்களை கணக்கிலெடுக்காமல் பொருளியல் அம்சங்களைப் பற்றியே இது அக்கறை கொண்டிருப்பதால் சோஷியலிசத்தை ஏற்க முடியாதென்கிறார். சோஷியலிசத்தை பற்றிய இத்தகைய சித்தரிப்பைக் கொண்ட போப், தனது ஆதரவாளர்களிடம் இடதுசாரிகளுடன் எவ்விதமான கூட்டும் வைத்துக் கொள்ள வேண்டாமென்று எச்சரித்தார். திருச்சபையுடனான மோதல் போக்கை விலக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்கள் அதிதீவிர கோட்பாடுகளை கொள்ள வேண்டாமென்றும் இதனால் எழக்கூடிய விபரீத விளைவுகளுக்கு தீர்வு கிடையாது என்றும் போப் அறிவுறுத்தியுள்ளார்.

ஆயின் பெரும்பாலான கத்தோலிக்கர்கள் வாடிகனின் கட்டளையை மீறியே செயல்பட்டு வருகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் ஒரு சில அம்சங்களில் வாடிக்ன் தலையிட்டு தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளது. விமோசன கோட்பாடு எனப்படும் இது நவீன கிருத்துவ கோட்பாடாக கருதப்பட்டு வருகிறது. டோரத்தி டேயை போன்றவர்கள் முற்போக்கான கருத்துக்களை மதக்கருத்துக்களு டன் இணைத்து அதன் அடிப்படையில் கத்தோலிக்க ஊழியர்களை ஒன்றிணைத்து போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

இந்த சகாப்தத்தில் மக்களின் வறுமைக்கும், துயருக்கும் அடிப்படை காரணியாய் அமைந்துள்ள முதலாளித்துவத்திற்கு எதிராக தீவிர யுத்தத்தை, இயேசுவின் பெயரால் நடத்தி வருகிறார்கள். எல்சால்வடாரில் அந்நாட்டு கத்தோலிக்க தலைமை குரு ஆஸ்கார் ரோமிரோ வறுமைக்கு எதிரான போராட்டத்தில் கட்டுமானத்தை தகர்ப்பதன் மூலமே வெற்றி பெற முடியுமென்பதை உணர்ந்து செயல்பட்டமையால், படுகொலை செய்யப்பட்டார். வறுமையை உயர்த்திப் பிடிப்பதால் விமோசனம் பெற முடியாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். இதே போன்றுதான் டென் பெர்ரி கனும் 1967ல் இது பற்றி விரிவாக எழுதினார். கொலை பாதகம் என்பது நெறிமுறை மீறிய செயல். வாழ்வு என்பது கண்ணியமான நடத்தை கொண்டிருப்பதோடு, சார்ந் திருக்கும் சமூகத்திற்கு தன்னுணர்வு இன்றி பணியாற்றுவதையே நாம் அங்கீ கரிக்கின்றோம். அதே நேரத்தில் சுதந்திரத்திற்காக உயிரை பணயம் வைத்து செயல் பட வேண்டியுள்ளது. காலம் வேகமாய் கரைகிறது. நல்ல மனிதர்களாக விளங்கக் கூடியவர்கள் அவலங்களைக் கண்டு மதக் கட்டளைகளால் மவுனம் சாதிக்கிறார் கள். ஆயின் ஏழை மக்கள் தற்காத்துக் கொள்ள முடியாமல் மரிக்கிறார்கள்.

குவாடிமாலாவின் ராணுவம் லத்தீன் அமெரிக்காவில் உள்ள கத்தோலிக்கர் களைப் பற்றி எழுதிய குறிப்புகள் வினோதமானது. "கத்தோலிக்கர்களுக்கும், கம்யூ னிஸ்டுகளின் சதி வேலைக்கும் வித்தியாசம் ஏதுமில்லை" என்று ராணுவ உளவுத்துறை குறிப்பெழுதியது. லத்தீன் அமெரிக்காவிலுள்ள கத்தோலிக்கர்கள் தெரசா மீது கண்டனக் கணைகளை வீசினர். வறுமையின் அடிப்படையை கண்டறி யாத, இறைப்பணி செய்வது பற்றி ஐயங்களை எழுப்பினர். சமூக அடிப்படையை மாற்றுவதுதான் வாழ்க்கையின் நோக்கமெனில், அதற்கான பணியை துவக்கட்டும் என்று அப்போது தெரசா பதிலளித்தார். . ஆயின் அவர் முன்னர் வறுமை மற்றும் துயர் குறித்து வெளியிட்ட கருத்துக்களிலிருந்து இது முரண்பட்டு இருந்தது.

பட்டும் படாமலும் வறுமை குறித்து கருத்துக்களை வெளியிட்ட தெரசா இது குறித்து ஒரு சில யோசனைகளை முன்வைக்கிறார். நீடித்த நிலைபாடு அவரிடம்

இல்லாததையே இக்கருத்துக்கள் வெளிப்படுத்துகிறது. "வறுமை என்பது தவிர்க்க முடியாதது என்பதோடு, அழகு மிக்கது" எனில் அதற்கான காரணிகளை கண் டறிந்து அடிப்படை கட்டுமானத்தை மாற்றிட வேண்டும் என்று சொல்வதில் என்ன பொருள் இருக்கிறது?

## அன்னையின் நண்பர்கள்

ஆயின் இவற்றையெல்லாம்விட வருத்தமளிக்கக்கூடியது தெரசாவின் நண்பர் குழாம் பற்றிய செய்திகள். தனது தர்ம காரியங்களுக்காக நிதி திரட்டும் பொருட்டு, இத்தகைய சகவாசத்தை அவர் கொண்டிருந்திருக்கிறார். இம்மாதிரியான பணி களில் அவர் மட்டுமின்றி பல்வேறு அரசு சாரா அமைப்புகளும் நிதித்தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு செல்வந்தர்களை அண்டி நிற்கிறது. இம்மாதிரியான அரசு சாரா அமைப்புகளின் செயல்பாடுகள், ஜனநாயக நெறிமுறைகள் பற்றி பல் வேறு கேள்விகளை எழுப்புகின்றன. இவை அரசின் பங்கு பணியை புறக்கணிக்கும் போக்கை உருவாக்குகிறது. சமூக அவலங்களுக்கு அரசமைப்பே காரணியாய் இருப் பதை மூடி மறைக்கிறது. சமூக நிதி வழங்குவதில் அரசு தன் பொறுப்புகளிலிருந்து பின்வாங்குவது 1967–73களில் துவங்கிய பொருளாதார சரிவின் போது துவங் கியது.

உடல் நலத்துறை, ஆரம்பக் கல்வி, ஊட்டச்சத்து போன்ற துறைகளில் அரசு தன் பங்களிப்பை கை கழுவியது. அப்பிரிவுகளில் அரசு சாரா பொது அமைப்புகள் ஊடுருவியது. உலக வங்கியின் தலைவராக ராபர்ட் மெக்னமாரா இருந்தபோது இப்போக்கு துவங்கியதோடு இதற்கு ஊக்கமும் அளிக்கப்பட்டது. அரசிற்கு மாற் றாக அரசு சாரா அமைப்புகளை அவர் பெரிதும் ஊக்குவித்தார். அதே சமயத்தில் ஆட்சி அதிகாரமும், உற்பத்தி முறைகளும் அரசின் கைப்பிடிக்குள் பத்திரமாகவே இருந்தன.

**1973ல் உலக வங்கி தலைமைக் குழுவின் கூட்டம் நைரோபியில் நடை பெற்றது. அரசுகள் சொத்தைப் பாதுகாக்கும் வகையில் காவல் பொறுப்பையும், நீதிமன்றங் களையும் கொண்டிருந்தால் போதும், மற்ற பொறுப்புகளை தனியாரிடம் வழங்கிட வேண்டும் என்று அவர் கருத்து தெரிவித்தார். அரசின் மீது முழுநம்பிக்கை கொண்டிருக்கக்கூடிய கினீஷிய பொருளாதார கோட் பாடுகள் தகர்ந்தன. அரசின் குறுக்கீடுகளுக்கு எதிரான தாக்குதல் வலுத்தது. எனவே அரசு சாரா அமைப்புகளுக்கு உதவிகளை அளிப்பதன் வகையில் வளர்ச்சிப் பாதைக்கு செல்ல முடியும் என்ற கருத்து உருவெடுத்தது.**

தற்பொழுது ஜனநாயக நாடுகளில் வாழும் உழைப்பாளி மக்களும், விவசாயிகளும், அரசிடமிருந்து எதையும் எதிர்நோக்குவதற்கு பதிலாக, தர்ம ஸ்தாபனங்களையே தங்களின் மேம்பாட்டிற்காக சார்ந்திருக்க வேண்டியதாக உள்ளது. அத்தோடு இதற்கு நிதி ஆதாரங்களையும் பெறும் பொருட்டு செல்வந்தர்களையே நாடி நிற்கும் நிலையும் உருவாகியது. அரசு சாரா அமைப்புகள் முறையான அரசின் நிதியுதவியை பெறுவதோடு, அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்தும் பெற்று வருகிறது. மற்றைய அமைப்புகளும் தனி நபர்களும் நிதி அளிப்பதில் பல்வேறு நோக்கங்கள் உள்ளது. தர்ம நோக்கம் என்பது ஒரு அம்சமாக இருப்பினும், தங்களை நிலை நிறுத்தி அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கமும் இதில் அடங்கியுள்ளது. ஏழைகளுக்கு உதவி செய்து அவர்களை திரட்டி தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

## கொள்கைகளில் சமரசம்

அன்னை தெரசாவிற்கு நிதியளித்து அவருடன் ஒன்றிணைந்து படம் எடுத்துக் கொண்டவர்களை பட்டியலிட்டால் போதும். டயானா ஸ்பென்சர், விபரீதமான குழந்தை மருத்துவர் துவாலியரின் மனைவி மைக்கேல் துவாலியர், நான்சி ரீகன், ஹிலாரி கிளிண்டன், ராபர்ட் மாக்ஸ்வெல் போன்றோர் தவிர சார்லஸ் கீட்டிங்கும் தெரசாவுடன் படம் எடுத்துக்கொண்டவர்களில் அடங்குவர்.

சேமிப்பு மற்றும் கடன் நிறுவன மோசடியின் உருவமாக சார்லஸ் கீட்டிங் இன்றும் கோடிக்கணக்கான அமெரிக்கர்களின் நினைவில் நிற்கிறார். பொதுமக்கள் பணத்தை மோசடி செய்தமைக்காக அவரது லிங்கன் சேமிப்பு மற்றும் கடன் நிறுவனம் 2 பில்லியன் அரசிற்கு அபராதம் செலுத்தியது. 1992ல் மோசடி மற்றும் அது போன்ற எழுபது குற்றங்கள் அவர் மீது சாட்டப்பட்டது. அது நிரூபிக்கப்பட்டிருந்தால், பத்தாண்டு சிறைத்தண்டனை பெற்றிருக்கக்கூடும். வழக்கு முறையில் உள்ள கோளாறினால் அவர் தப்பித்தார். கீட்டிங் அமெரிக்க உழைப்பாளிகளின் பலகோடி பணத்தை மோசடி செய்ததோடு, தன்னை காத்துக்கொள்ளும் பொருட்டு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பெருமளவில் பணத்தை வாரிக் கொடுத்து சரிக்கட்டினார். அந்த ஐந்து உறுப்பினர்களுமே "கீட்டிங் ஐவர்" என்று அன்புடன் அழைக்கப்பட்டனர்.

கீட்டிங் உச்சாணிக் கொம்பில் இருந்த நேரம். ரீகனிசம் பற்றிய தவறான நம்பிக்கையின் விளைவாக, கீட்டிங் காருண்யா இல்லத்திற்கு 125 மில்லியன் அன்பளிப்பாக வழங்கினார். அது மட்டுமின்றி தனது சொந்த ஜெட் விமானத்தையும் தெரசா

பயணம் செய்யும் பொருட்டு தந்திருந்தார். அதே நேரத்தில் தனது நண்பர் ஜெர்ரி ஃபாக்ஸை சிக்கலிலிருந்து விடுவிக்கும் பொருட்டு 8.5 மில்லியன் செலவழித்தார். ஆபாச படத்திற்கு எதிரான குழுவொன்றை நிக்சன் அமைத்ததிலிருந்து கிட்டிங் ஜெர்ரியுடன் நட்பு கொண்டிருந்தார்.

நீதிபதி லான்ஸ் இடோ முன்னிலையில் இதே கீட்டிங் 1992ல் நிறுத்தப்பட்டார். அச்சமயத்தில் அந்த நல்ல நீதிபதிக்கு தெரசா தனது நண்பர் சார்பாக கடித மொன்றை எழுதினார்.

"நாங்கள் வர்த்தகம், அரசியல், நீதிமன்றம் ஆகியவற்றின் பணிகளில் குறுக்கீடு செய்வதில்லை" என்று போலித்தனமான முன்னுரையுடன் கடிதமொன்றை எழுதினார். ஆயின் உண்மையிலேயே அந்த வேலையை செய்யும் நோக்கில்தான் அக்கடிதம் எழுதப்பட்டது. "திருவாளர் கீட்டிங் ஏழைகளுக்கு பல்வேறு உதவிகளை செய்பவர். எனவே அவர் சார்பில் நான் உங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகின்றேன்" என்று தெரசா அக்கடிதத்தில் குறிப்பிட்டார். அதே கடிதத்தில் பின்னர் "கீட்டிங் பற்றி வேறெதுவும், தான் அறிந்திருக்கவில்லை" என்று மாய்மாலம் செய்கிறார். "திருவாளர் சார்லஸ் கீட்டிங் தொழில் பற்றி வேறெதுவும் நான் அறிந்திருக்கவில்லை, மேலும் நீங்கள் விசாரணை நடத்தும் விஷயங்களைப் பற்றியும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. நான் அறிந்தமட்டில் அவர் எப்போதுமே கடவுளின் புதல்வர்களாக விளங்கும் ஏழைகள் மீது பரிவும், பாசமும் கொண்டிருந்தார். அதுமட்டுமின்றி எந்த சமயத்திலும் தேவைப்படும் உதவிகளை அவர் செய்து வந்தார். தனது கடிதத்தை நெஞ்சிலே நிறுத்தி பிரார்த்தனை செய்வதோடு யேசுவின் உதாரணங்களை பின்பற்ற வேண்டும். (தவறை மறக்க, மன்னிக்க வேண்டும்)" என்று நீதிபதியிடம் அன்னை கோரினார்.

இதன் மூலம் தெரசா ஒன்றும் தெரியாதவர் என்று கருதலாகாது. அதேபோன்று கீட்டிங் எவ்வகையில் (அதுவும் கடவுளுக்கு பிடித்த ஏழை மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மூலம்) பணம் சம்பாதிக்கிறார் என்பது குறித்தும் அவர் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. எப்படியிருந்தாலும், அதில் ஒரு சிறு பங்கு காருண்யா இல்லத்திற்கு அளிக்கப்பட்டு, அன்னையின் புகழ் ஓங்குகிறது. மற்ற அரசு சாரா அமைப்புகளைப் போன்றே அன்னை தெரசாவும் பல்வேறுவிதமான பேர்வழிகளிடமிருந்து நன்கொடைகளை பெறும்பொருட்டு தனது கொள்கைகளில் சமரசம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

## பெண்மைக்கு எதிராக அன்னை

1955ல் விவாகரத்து மற்றும் மறு திருமணத்திற்கு அயர்லாந்தில் சட்டபூர்வமான பாதுகாப்பளிக்கும் பொருட்டு கருத்துக்கணிப்பொன்று நடைபெற்றது. அத்தறுவாயில் அன்னை அத்தீவில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். பெண்ணீயத்திற்கும், அவர்களது கோட்பாடுகளுக்கும் எதிரான பிரச்சாரத்தை தீவிரமாக நடத்தினார். இருப்பினும் அந்த முக்கியமான கருத்துக்கணிப்பில் 49.7 விழுக்காடு வாக்குகள் எதிராக பதிவான நிலையிலும் 50.3 வாக்குகள் ஆதரவாக பெற்று பெண்கள் வெற்றி பெற்றனர்.

அதேபோன்று சார்லஸும் டயானா விண்ட்ஸரும் விவாகரத்து பெறும்பொருட்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அப்போது லேடீஸ் ஹோம் ஜர்னலுக்கு அளித்த பேட்டியில், திருமணங்களினால் எவருமே இன்பமாக இருக்க முடியவில்லை என்று தெரசா அவர்களின் பிரிவு பற்றி கருத்து தெரிவித்தார்.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவனுக்கு ஒரு கருத்தையும் மற்ற சாமானியருக்காக ஒரு கருத்தும் தெரிவிப்பது அவர்களைப் பொறுத்தமட்டில் வழக்கமானதுதான். இதற்கு பல்வேறு எடுத்துக்காட்டுகளை நாம் காட்ட முடியும்.

1984 டிசம்பர் 2–3 நாட்களில் போபாலிலுள்ள யூனியன் கார்பைட் தொழிற்சாலையில் மெதில் ஐசோ சயனைட் வாயு கசிந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் விஷப்புகையை சுவாசித்தமையால் மரித்தனர். மனித உயிர்கள் குறித்து பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் எவ்வித அக்கறையும் கொள்வதில்லை என்பதற்கு இந்த விபத்து ஓர் எடுத்துக்காட்டு. அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பதிலாக அலட்சியமாகவே இருந்து வருகிறார்கள்.

## விஷவாயுவும் மேரி மெடலும்

அவர்களைப் பொறுத்தமட்டில் மனித உயிர்களைக் காட்டிலும் சொத்தும், லாபமும்தான் அதி முக்கியமானது. 1983ல் யூனியன் கார்பைடு நிறுவனத்தின் மொத்த சொத்தின் மதிப்பு பத்து மில்லியன் டாலராகும். அதே ஆண்டு அவர்களின் விற்றுமுதலும் ஒன்பது பில்லியன் டாலராகும். பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி அக்கறை கொள்ளாததோடு அதுபற்றிய அக்கறையின்மையின் காரணமாகத்தான் அவர்களது லாபம் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் மட்டும் அவர்கள் பாதுகாப்பு விதிகளை அலட்சியப்படுத்தி வருகிறார்கள் என்று இல்லை, அமெரிக்காவில் உள்ள வர்ஜீனியா தொழிற்சாலையிலும் இதேமாதிரியான நிலைபாட்டைத்தான் கொண்டுள்ளார்கள்.

போபாலில் ஆயிரக்கணக்கானவர்கள் மரித்தனர். மேலும் பல்லாயிரவர் கடும் பாதிப்பிற்குள்ளாயினர். அந்த சோகமான நிகழ்வின் போது அந்நகருக்கு அரசு கார்களின் அணிவகுப்பிற்கிடையே தெரசா போபால் விஜயம் செய்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு இறைத்தூதர் மேரியின் அலுமினிய மெடல்களை அளித்து அருளுரைவழங்கினார். உயிர் பிழைத்து இருப்பவர்களிடம் அவர் கூறினார். இதை ஒரு விபத்தாகத்தான் கருத வேண்டும். இது ஒரு தீயைப் போன்றது. எங்கும், எப்போதும் பரவக்கூடியது. இதை நாம் மன்னித்து மறந்து விடுவது என்பதுதான் முக்கியமான செயலாகும். மன்னிப்பதன் வாயிலாக நமது இருதயம் சுத்தமடைகிறது. அதன் பின்னர் நாம் நூறு மடங்கு சக்தி பெற்றவராவதோடு புதிய மனிதராக மாறுவோம். அன்னை தெரசாவைப் போன்றே இரண்டாவது போப் ஜானும் கருத்து தெரிவித்தார். "இது ஒரு சோகமான நிகழ்வு என்றும், மனிதன் முன்னேற்றப்பாதையில் செல்லுகையில் இது போன்றவை நிகழத்தான் செய்யும்" என்றும் அவர் கூறினார்.

இப்படிப்பட்ட படுமோசமான கருத்துக்களை வெளியிடும் இருவரிடமும் ஒரு ஒற்றுமை உள்ளது. பன்னாட்டு வர்த்தக நிறுவனம் தனது பொறுப்பை கைகழுவி, லாப வேட்கைக்காக மக்களை பலிகேட்பது பற்றி இருவருமே அக்கறை கொள்ளவில்லை.

## சோசலிசமே தீர்வாகும்

வங்கத்தின் உழைப்பாளி மக்களும், விவசாயிகளும், தினந்தோறும் தங்களது அன்றாட அரசியல் நடவடிக்கைகளின் மூலம் அரசியலை நன்கறிகின்றார்கள். இதில் ஒரு சிலர் வறுமையின் நிவாரணமாக அன்னை தெரசாவிடம் அடைக்கலம் தேடுகிறார்கள். வேறு சிலர் ஆங்கில – அமெரிக்க பத்திரிகைகள் அவ்வளவு முக்கியமளிக்காத ராமகிருஷ்ணா இயக்கத்தில் சேருகிறார்கள். வேறு சிலருக்கு அன்னையின் பணி வியப்பளிப்பதாய் இருக்கிறது.

முதலாளித்துவ பகட்டின்றி எளிமையான முறையில் தெரசா தனது பணியை நடத்தி வருகிறார். தானே ஏற்றுக்கொண்ட முடிவற்ற பாதையில் செல்கிறார். அவரது துறவு வாழ்வுப் பணிகளை இவ்வகையில் மதிப்பீடு செய்கையில், உழைப்பாளி மக்களுக்கும், விவசாயிகளுக்கும் பொருள் பொதிந்ததாக இருக்கும்.

வறுமை பற்றிய கம்யூனிஸ்ட்டுகளின் அணுகுமுறையை அனைவருமே அறிவர். எனவே, வறுமை மற்றும் துயர் குறித்தும், அதற்கான தீர்வுகள் குறித்தும் வேறுபட்ட நிலையைத்தான் கொள்ள வேண்டியிருக்கும். கம்யூனிஸ்ட்டுகள் மக்கள் உண்ணுவதற்காக நாள்தோறும் மீன் தரமாட்டார்கள். கம்யூனிசம் என்பது மக்களுக்கு மீன் பிடிக்கும் யுக்தியை ... நிரந்தரமாக உண்...

வது பற்றியும் போதிக்கின்ற தத்துவமாகும்.

எனவே கல்கத்தாவிலுள்ள கம்யூனிஸ்ட்டுகள்தான் உண்மையிலேயே மக்களுக்கு தொண்டாற்றும் பெயரற்ற தெரசாக்கள். அவர்கள் சோசலிசத்தை உருவாக்குவதன் மூலம் நிரந்தரமாக மக்களின் வறுமையை போக்க முடியும் என்று போராடி வருகிறார்கள்.

இந்த கட்டுரையின் மதிப்பீடு அன்னை தெரசாவை மட்டும் கொண்டிருப்பதாக கருதலாகாது. ஒட்டுமொத்தமாக முதலாளித்துவ நன்கொடைகள் மூலம் நடத்தப்படும் தர்ம ஸ்தாபனங்களுக்கும் இது பொருந்தும்.

எதிர்வரும்காலங்களில் ஏராளமான தெரசாக்கள் உலகெங்கிலும் உருவாகக்கூடும். பாவகரமான செயல்களின் கழுவாயாக வெவ்வேறு விதமான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளக்கூடும். ஆயினும் பாவகரமான முதலாளித்துவ அமைப்பினால் அவை தீர்வு பெறாது. அதே நேரத்தில் எண்ணற்ற பெயரற்ற கம்யூனிஸ்ட்டுகள் இப்புவியிலேயே சொர்க்கத்தை உருவாக்கும் முயற்சிகளில் கடுமையாக ஈடுபட்டு போராட்டத்தை மும்முரமாக நடத்தி வருவர்.

## சீன புரட்சியின் 50ம் ஆண்டு விழா - சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சோஷியலிச சமூகத்தைக் கட்ட ஐம்பது முழக்கங்கள்.

## இதுவே சீன நாட்டின் தற்காலக - எதிர்காலத் திட்டங்கள்

**எஸ்.ஏ.மாணிக்கம், கோவை**

சீன மக்கள் குடியரசு உதயமாகி ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவும், ஆட்சிக்குழுவின் மத்திய அலுவலகமும் அக்டோபர் 1 அன்று தலைநகர் பெய்ஜிங்கில் சீன மக்களுக்கு முன்பாக வைத்துள்ள 50 முழக்கங்கள் வருமாறு:

1. சீன மக்கள் குடியரசின் 50ம் ஆண்டு விழாவினை உற்சாகமாக கொண்டாடுவீர்!

2. சீனாவின் சீர்திருத்தம், வெளி உலகிற்கு திறந்துவிடுதல் மற்றும் சோசலிச நவீனமயமாக்கல் பாதையின் மகத்தான வெற்றிகளை மனப்பூர்வமாக வாழ்த்துவீர்!

3. வளமான, வலிமையான, ஜனநாயகப்பூர்வமான, நாகரீகத்தின் முன்னேறிய சோசலிச நாடாக சீனாவை கட்டுவதில் உண்மையாக உழைத்திடுவீர்!

4. டெங்சியோபிங் கோட்பாடு எனும் மகத்தான பதாகையை உயர்த்திப் பிடிப்பீர்; 21ம் நூற்றாண்டில் சீன நாட்டிற்கே உரித்தான முறையில் சோசலிசத்தை கட்டும் பணியில் முன்னேறுவீர்!

5. டெங்சியோபிங் கோட்பாடு எனும் மகத்தான பதாகையை உயர்த்திப் பிடித்து, கட்சியின் ஆயுதமாக பின்பற்றி டெங்சியோபிங் கோட்பாடுகளை மக்களுக்கு போதிப்பீர்!

6. பொருளாதார வளர்ச்சியையே மையமான கடமையென எடுத்துக்கொள்வீர்; அடிப்படையான நான்கு கொள்கைகளுடன், சீர்திருத்தம், வெளி உலகிற்கு திறந்துவிடும் கொள்கைகளை பின்பற்றுவீர்!

7. இப்போதுள்ள சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், சீர்திருத்தத்தை தொடர்வதோடு, சீனாவை வெளி உலகிற்கு அகலமாக திறந்துவிடுவதோடு, வளர்ச்சியை உயர்த்தி, ஸ்திரத்தன்மையை பராமரிப்பீர்!

8. மனதை சுதந்திரமாக்கி, காரியங்களிலிருந்து உண்மையைக் காத்து சீர்திருத்தம், வெளி உலகிற்கு திறந்துவிடும் கொள்கைகளை உறுதியாக வளர்த்தெடுப்பீர்!

9. சோசலிச சமூகத்தின் அடிப்படையான கடமையென உற்பத்தி சக்திகளை வளர்த்திடுவீர்!

10. அரசியல் ஸ்திரத்தன்மையையும், ஒற்றுமையையும் பராமரிக்கவும், ஒருங்கிணைப்பையும் மேற்கொள்வீர்!

11. பொருளாதார மறு கட்டமைப்பை தீவிரமாக்குவதோடு, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு பொருத்தமான முறையில் பொருளாதார கட்டமைப்பை கட்டவும், அதை அபிவிருத்தி செய்யவும் வேண்டும்!

12. சோசலிச சந்தை பொருளாதார முறையினை உறுதிப்படுத்தி, பொருளாதார கட்டமைப்பையும் பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளிலும் அடிப்படையான மாறுதல்களை வேகப்படுத்த வேண்டும்!

13. அடிப்படையான பொருளாதாரம் பொதுமக்கள் கட்டுப்பாட்டில் இருப்பதிலும், சிறு சிறு பகுதி தனியார் வளர்ச்சிக்காகவும், "ஒவ்வொன்றும் அவர்களுடைய வேலைக்கு ஏற்ற" எனும் முறைமுக்கிய பங்களிப்பாகவும் மற்றவை ஏற்கெனவே உள்ள முறையிலும் இருப்பதை கடைப்பிடிக்க வேண்டும்.

14. அரசியல் மறுகட்டமைப்பை உயர்த்தி, சோசலிச ஜனநாயகத்தை வளர்த்து, சோசலிச நெறிமுறைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

15. சட்டத்தின்படி ஆட்சி செய்ய வேண்டும், சட்டம் ஆட்சி செய்யும் சோசலிச நாட்டை கட்ட வேண்டும்.

16. "மக்கள் காங்கிரஸ்" முறையை கடைப்பிடித்து முன்னேற வேண்டும்.

17. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் அரசியல் ஆலோசனைகளையும், பல கட்சி ஒத்துழைப்பு முறையையும் கடைப்பிடித்து முன்னேற வேண்டும்.

18. பிராந்திய இன தன்னாட்சி அமைப்பு முறைக்கு உடன்பட்டும் அபிவிருத்தியும் காணவேண்டும். சமத்துவம், ஒற்றுமை, பரஸ்பர உதவிகள் என்ற சோசலிச தேசிய உறவுகளை ஒருமுகப்படுத்தி வளர்த்து, அனைத்து தேசிய இனங்களுக்கும் முன்னேற்றம் பொதுவானது என்பதை உணர வேண்டும்.

19. சகலத்திற்கும் இதயமாக விளங்கும் உழைக்கும் வர்க்கத்தின் மீது பற்று வைக்க வேண்டும்.

20. சுயசார்பு, கடும் உழைப்பு, நாட்டை சிக்கன வழியில் கட்டி, ஒவ்வொரு வேலை களிலும் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

21. அறிவுக்கும், மதிப்புமிக்க திறமையான மக்களுக்கும் மரியாதை செலுத்தி, விஞ்ஞானத்தாலும், கல்வியாலும் தேசம் முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லும் தொலைநோக்கு தந்திரங்களை அமுலாக்குவது நமது கடமை!

22. குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை அமுலாக்கி இயற்கை வளத்தையும், சுற்றுச் சூழலையும் பாதுகாத்து, நிலைத்து நிற்கும் வளர்ச்சிக்கான யுக்திகளை உருவாக்கு வது நமது கடமை!

23. விவசாயத்தின் அடிப்படையான பங்களிப்பை பலப்படுத்தி, கிராமப்புற சகல பொருளாதாரத்தை வளர்த்திடுவது நமது கடமை!

24..அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத் திற்காக புதிய சூழல்களால் உருவாக்கும் பூர்வாங்க நடவடிக்கைகளின் பரி சோதனைகளையும் எதிர்கொள்ள நம்பிக்கையுடனும், தைரியத்துடனும் இருக்க வேண்டும்!

25. சோசலிச கலாச்சாரத்தையும், நெறிகளையும் அபிவிருத்தி செய்வது நமது கடமை.

26. விஞ்ஞானபூர்வமான கோட்பாடுகளால் மக்களை தயார்படுத்தி, அவர்களை சரியான பொதுகருத்து அடிப்படையில் வழிகாட்டி, உன்னதமான லட்சியங்களை உதாரணங்களுடன் வழங்கி சிறப்பான வேலைகளினால் அவர்களின் உற்சாகத்தை கிளர்ந்தெடுப்பது நமது கடமை!

27. சோசலிசத்திற்கும் மக்களுக்கும் பணியாற்றுவதையே லட்சியமாக கொள்வதும், நூறு மலர்கள் மலரட்டும், நூறு பள்ளிகளின் சிந்தனைகள் வளரட்டும் எனும் போதனையை வற்புறுத்தி, சோசலிச விஞ்ஞானம், கலை இலக்கியங்களை வளர்ப்பதே நமது கடமை!

28. பொது சுகாதாரம், உடற்பயிற்சி கலாச்சாரத்தை வளர்த்து, மக்களின் உடல் வலிமையை அபிவிருத்தி செய்வது நமது கடமை!

29. இப்புதிய சகாப்தத்தில் தேசபக்த ஐக்கிய முன்னணியை ஒருங்கிணைத்து வளர்ப்பதும் நமது கடமை!

30. "அமைதியான மறு இணைப்பு", "ஒரு நாடு, இரு அமைப்பு" கொள்கைகளை

உயர்த்திப் பிடித்து, தாய்நாட்டின் மறு இணைப்பெனும் மிகப்பெரிய நோக்கத்தை நிறைவேற்றுவது நமது கடமை.

31. வெளிஉலகிற்கு திறந்துவிடும் அரசின் அடிப்படையான கொள்கையை கடைப்பிடித்து அபிவிருத்தியடைய கடுமையாக உழைத்திடுவோம்!

32. அமைதிக்கான சுதந்திரமான அயல்நாட்டு கொள்கையை உயர்த்திப்பிடித்து, அமைதிக்கும், வளர்ச்சிக்குமான உன்னதமான காரியத்திற்கு பாடுபடுவதோடு, மனிதகுலத்திற்கான நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்குவோம்.

33. தத்துவார்த்த கல்வி, அரசியல் விழிப்புணர்வு மற்றும் நன்னடத்தையை அழுத்திச் சொல்லுவோம்!

34. கட்சி வேலைமுறைகளில் அபிவிருத்தி காணவும், பரிசுத்தமான ஆட்சியை கட்டவும், இதயப்பூர்வமாகவும், ஆத்மசுத்தியுடனும் மக்களுக்கு சேவை செய்வோம்!

35, கட்சி தலைமையை பலப்படுத்தி வளர்த்து, கட்சி கட்டுகிற மகத்தான பணியினை மேலும் உயர்த்திப்பிடிப்போம்!

36. அரசியல் பக்குவத்துடனும், போர்குணமிக்க தகுதியினை பெற்று, நிறைவான வேலை முறையினை பெற்று, கடும் ஒழுங்கு முறையுடனும், போதுமான உளமார்ந்த ஆதரவையும் பெற்றிடுவோம்!

37. இராணுவ கட்டமைப்பையும், சீர்திருத்தத்தையும் தீவிரமாக உயர்த்துவோம்! புதிய அரசியல், நவீன தரத்திற்கேற்ப மக்கள் விடுதலை இராணுவ கட்டமைப்பை உயர்த்திடுவோம்!

38. ஒன்றுபட்ட சிந்தனை, நம்பிக்கை, சந்தர்ப்பத்தை நழுவ விடாத போக்கு, கஷ்டங்கள் இருப்பினும் தொடர்ந்து முன்னேறுவது, ஒருசேர ஒன்றுபடுவது, கடினமாக உழைத்திடுவது என்பதை கட்டிக்காப்போம்!

39. கஷ்டங்களை கண்டு அஞ்சாமலும், கடினமாக போராடுவதோடு, விடாப்பிடியாக இருப்பதோடு வெற்றிக்காக துணிவுகொள்வோம்.

40. தோழர் ஜியாங் ஜெமின் மையமாக உள்ள கட்சியின் மத்தியக்குழுவுடன் நெருக்கமாக பவனி வருவோம்; ஒரே இதயத்துடன் கடினமாக உழைத்திடுவோம், புதிய சாதனைகளுடன் புதிய நூற்றாண்டை வாழ்த்துவோம்.

41. உழைப்பாளிகள், விவசாயிகள், அறிவாளிகள் மற்றும் அனைத்து சீன தேசத்தவர்களுக்கும் வணக்கம் செலுத்துவோம்!

42. மக்கள் விடுதலை படையின் அலுவலர்களையும், வீரர்களையும், ஆயுத போலீசாரையும், பொதுமக்கள் பாதுகாப்பு படைகளையும் வணங்குவோம்!

43. கம்யூனிஸ்ட் அல்லாத கட்சிகளுக்கும், மக்கள் அமைப்புகளுக்கும், அனைத்து மட்டங்களிலும் உள்ள தேசபக்த மக்களுக்கும் வணக்கம் செலுத்துவோம்!

44. ஹாங்காங் சிறப்பு நிர்வாக பிராந்தியம், மாகோ, தைவான் மற்றும் கடல் கடந்து எங்கெல்லாம் இருக்கும் சக சீன தேசத்தவர்களுக்கும் வணக்கம் செலுத்துவோம்!

45. சீனாவின் நவீனமயமாக்கல் பாதையை ஆதரிக்கும் அக்கறை கொண்ட அயல்நாட்டு நண்பர்களுக்கும், உலக மக்களுக்கும் வணக்கம் செலுத்துவோம்!

46. மகத்தான மக்கள் சீன குடியரசு நீடூழி வாழ்க.

47. மகத்தான சீன கம்யூனிஸ்ட் கட்சி நீடூழி வாழ்க

48. மகத்தான மார்க்சிஸம், லெனினிசம், மசேதுங் சிந்தனைகள், டெங்சியோபிங் கோட்பாடுகள் நீடூழி வாழ்க.

49. அனைத்து சீன தேசிய இனங்களின் ஒற்றுமை நீடூழி வாழ்க.

50. உலக மக்களின் மகத்தான ஒற்றுமை நீடூழி வாழ்க.

*("சீனாவிலிருந்து செய்திகள்" எனும் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)*

Licenced to Post Without Pre-payment/No: 27 Regd. No: TN/MA(C)/193/99

MARXIST